மலர்-3 இதழ்-56 டிசம்பர் 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play




## சிவபெருமானின் சிவதாண்டவங்கள்

# சிதிலமடைந்த சிலைகள் நன்மையா? தீமையா?

# தீய வசிய சக்தியை அழிக்கும் குங்குமம்

குங்குமம் என்பது மஞ்சள், எலுமிச்சை, படிகாரம் போன்ற மிகுந்த சக்தி வாய்ந்த பொருட்களால் தயாரிக்கப்படும் ஒரு சக்தி வாய்ந்த கலவையாகும். இவ்வாறு தயாரிக்கப்படும் குங்குமம், பெண்களுக்கு மிகுந்த பாதுகாப்பு அரனாக திகழ்கிறது.

தரமாக தயாரிக்கப்படும் குங்குமத்தை அணியும் பெண்களுக்கு, மாய, மந்திர சக்திகளால் ஒரு போதும் தீங்கு விளையாது. தீய சக்திகள் தரமான குங்குமத்தை அணியும் பெண்களை நெருங்காது, இதனால்தான் நம் முன்னோர்கள் பெண்கள் குங்குமம் வைப்பதை அவசியம் கடைபிடிக்க வேண்டும் என்று வழிமுறைகளை வகுத்தனர், வீட்டை விட்டு வெளியே வரும்போது அவசியம் குங்குமத்தை வைக்கச் சொல்லி வலியுறுத்தியதன் காரண காரியமும் இதைத்தான் குறிக்கும்.

ஸ்டிக்கர் பொட்டு போன்ற நாகரீக அழகு சாதனங்கள் அழகுக்கு மட்டுமே பயன்படுமேயொழிய வேறு எந்த வகையிலும் பயன் படாது.

பெண்கள் குங்குமம் அணிவதால் ஏற்படும் ஒருசில முக்கிய பலன்களைப் பார்ப்போம்.

1. சுமங்கலிப்பெண்களின் தலை வகிட்டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர் களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.
2. சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீ மகாலட்சுமியின் இருப்பிடம் சுமங்கலி களின் சக்தி குங்குமத் தில் உள்ளது.
3. வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறு பவர் இருவருக்கும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும்.
4. குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம்.
5. பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர் களுக்குக் கொடுக்க வேண்டும்.
6. அரக்கு நிற குங்குமம் சிவசக்தியை ஒரு சேரக் குறிப்பதாகும். திருமணப்புடவை அரக்கு நிறத்தில் இருப்பது நல்லது.
7. தெய்வீகத்தன்மை, சுபதன்மை, மருத்துவத் தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல் மற்றும் மனம் ஆகியவைகளுக்கு அதிக நன்மைகள் உண்டாகும்.



# அபசகுனம்

நாம் குங்குமத்தை மிக மிக புனிதமாக கருதுவது வழக்கம். அத்தகைய குங்குமத்தை நாம் கை தவறி கீழே கொட்டிவிட்டால் அது அபசகுனமாக இருக்குமா என்று ஒருவித பீதி மனதிற்குள் எழும்.

பொதுவாக நாம் கைதவறி கொட்டிய எதையும் அபசகுனமாக கருத தேவை இல்லை. காரணத்துடன் நிகழும் எந்த நிகழ்விற்கும் சகுனத்திற்கும் சம்மந்தமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு, கார்த்திகை தீபத்தன்று வாசலில் தீபம் ஏற்றுவோம் ஆனால் அது காற்றில் அணைந்துவிடும். இதை அபசகுனமாக கருத முடியுமா? காற்றடித்தால் தீபம் ஆணையத்தான் செய் யும். அதுபோல கோவிலில் கூட்ட நெரிசலில் நாம் வாங் கும் பிரசாதம் கைதவறி கீழே விழுந்து விடும்.

இதுபோன்ற நிகழ்வுகள் எல்லாம் நம்முடைய அஜாக்கிரதையால் நிகழ்வதே தவிர இதெல்லாம் அபசகுனம் கிடையாது.

எதைத்தான் சகுனமாக கருத வேண்டும்?

நம்மை மீறி நடக்கும் சில செயல்களையே நாம் சகுனமாக கருத வேண்டும். உதாரணத்திற்கு நாம் வெளியில் கிளம்பும் போது வாசலில் வந்து அண்ணாந்து பார்க்கையில் கண்ணில் கருடன் தென்பட்டால் அது சகுனம்.

இது நம்மை மீறிய விஷயம். இதுபோல் நடக்கும் நிகழ்வுகளையே சகுனமாக கருதவேண்டும். ஆகையால் நம் அஜாக்கிரதையால் நடக்கும் சில விஷயங்களை சகுனம் என்று நினைத்து மனக்குழப்பம் அடைவதை விடுத்து நிம்மதியாய் வாழ்வதே சிறந்தது.





# பலபெயர்கள் ஒரே மூலிகை

இந்தச் செடிக்கு பல பெயர்கள் உண்டு, இது இல்லாத இடம் இல்லை இந்த பூவை 5,6 பறித்து வாயில் போட்டு மென்று சாப்பிட்டால் பல் வலி, சொத்தை, பல் பூச்சிகள் வெளியேறி விடும் பார்க்கும் போது சாப்பிடுங்கள் இலை யை அரைத்து பத்து போட்டால் ஆறாத சர்க்கரை ரணம் ஆறும்...

இதன் மற்ற பெயர்கள்..

1. கைமூக்குத்திப்பூ,
2. காயப்பச்சிலை,
3. கிணற்றடிப் பூண்டு,
4. தலைவெட்டியான்,
5. கிணற்றுப்பாசான்,
6. தாத்தா செடி,
7. வெட்டுக்காய பூண்டு,
8. கரும்பூடு,
9. சாணிப்பூடு,
10. மிருகம்பச்சிலை,
11. முறியம் பச்சிலை,
12. அரிவாள்மனைப்பூண்டு,
13. ஓரம்பூடு,
14. வெட்டி முறித்தான்,
15. ஒடியன் பச்சிலை,
16. ஆணா பெண்ணா செடி,
17. வெட்டுக்காயப் பச்சிலை,
18. கள்ளிப்பூட்டான்,
19. முருகன் பச்சிலை,
20. பொடுதலைப் பூண்டு,
21. பொற்றலை கையான்,
22. விரிய கடி பூண்டு,
23. வெட்டுவாங்கண்ணி,
24. இரண பூண்டு,
25. கோணேசர் மூலி,
26. உறம்பு பூடு,
27. தஞ்சாவூரான் பூண்டு,
28. வெட்டு கத்தாழை,
29. ஓரங்க பூடு,
30. தண்ணீர் பூண்டு

என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இதன் பலனும் அற்புதமானது.



# சிதிலமடைந்த சிலைகளை வழிபடுவது நன்மையா? தீமையா?

ஒருசில கோவில்களில், குறிப்பாக மிகப் பழமையான கோவில்களில் கடவுள் சிலைகள் சிதிலமடைந்திருக்கும். அதை வழிபடலாமா? வேண்டாமா? என்ற குழப்பம் பலரது மனதிலும் நிலவுவது வழக்கம். எப்படி இருந்தால் என்ன அது தெய்வத்தின் சிலை தானே என்று சிலர் வழிபடுவார்கள். சிலர் வழிபடாமல் இருப்பார்கள். உண்மையில் அத்தகைய சிலைகளை வழிபடுவது சரியா என்பதை பற்றி பார்ப்போம்.

தெய்வச் சிலையின் உருவத்தை மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். அவை:

உபாங்கம்

பிரத்யங்கம்

அங்கம்

## உபாங்கம்:

கை, கால்கள், தலை முதலியன உபாங்கம் ஆகும். இவற்றில் ஏதாவது சிதிலமடைந்திருந்தால் அதை உடனே சரிசெய்து பிராயச்சித்த கும்பாபிஷேகம் செய்த பிறகே வழிபட வேண்டும்.

## பிரத்யங்கம்:

கை மற்றும் கால்களில் உள்ள விரல்கள், ஆயுதங்கள், கிரீடம் ஆகியவையே பிரத்யங்கம். இவைகளில் ஏதாவது சிதிலமடைந்திருந்தால் எந்த தோஷமும் இல்லை. அந்த சிலையை தாராளமாக வழிபடலாம். கோவில் கும்பாபிஷேகத்தின் போது அந்த சிலையை சரி செய்து கொள்வது சிறந்தது.

## அங்கம்:

முகம், கழுத்து, மார்பு, இடுப்பு, தொடை முதலியன ஒரு சிலையின் முக்கிய அங்கங்கள் ஆகும். இவற்றில் சரிசெய்ய முடியாதபடி சிதிலம் இருந்தால் அந்த சிலைகளை வழிபடுவதில் பயனில்லை. அதற்கு பதிலாக வேறு ஒரு சிலையை கோவிலில் பிரதிஷ்டை செய்வதே சிறந்தது.

மேலே கூறப்பட்டுள்ள விதிகள் அனைத்தும் மனிதர்கள் வடித்த சிலைகளுக்கே தவிர சுயம்புவாக தோன்றிய தெய்வச் சிலைகளுக்கு இது பொருந்தாது.

# பூஜை ஜபம் தியானம்



பகவான் ரமணரை சந்தித்த பக்தர் ஒருவர், பகவானே! பூஜை, ஜபம், தியானம் இவற்றின் தன்மைகளைப் பற்றிக் கூறுங்கள்! என்று கேட்டார். உடல், வாக்கு, மனம் என்ற மூன்றும் பங்கு பெறுவது பூஜை. வாக்கும், மனமும் மட்டும் ஈடு படுவது ஜபம். கடைசியில் மனம் மட்டும் தனித்து இயங்கி நிற்பதே தியானம் என்றார் ரமணர்.

# செய்யும் செயலில் கவனமிருந்தால் கேலியும் கிண்டலும் மறைந்து போகும்

அந்த குருகுலத்தில் பல சீடர்கள் இருந்தனர். அனைவரும் ஆர்வமாக எல்லாவற்றையும் கற்றுவர, ஒரு சீடன் மட்டும் கவலையோடு இருந்தான். துறவி அவனை அழைத்து விசாரித்தார். குருவே! எல்லோரும் என்னை கிண்டல், கேலி செய்கின்றனர். தாங்க முடியவில்லை. கோபம் தலைக்கேறுகிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை! என்றான்.

இந்தக் கிணற்றின் கைப்பிடி சுவர் மீது ஏறி பத்துமுறை சுற்றிவா! என்றார் குரு.

குரு எதற்காக அப்படிச் சொல்கிறார் எனத் தெரியாவிட்டாலும், குருவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, கவனமாக கிணற்றுச்சுவரில், ஏறி, சிரத்தையுடன் பத்துமுறை வலம் வந்தான் சீடன்.

நீ கிணற்றுச் சுவரில் ஏறி நடந்தபோதுகூட உன்னை பலர் கிண்டல் செய்தார்களே, அதைக் கேட்டாயா? என்றார் குரு.

இல்லை குருவே! கிணற்றிற்குள் விழுந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்ததால் யார் பேசியதும் கேட்கவில்லை! என்றான்.

குரு சொன்னார் ஒரு செயலில் மிக கவனமாக, உண்மையாக நாம் ஈடுபட்டிருக்கும் போது, பிறர் சொல்லும் வார்த்தை நமக்கு கேட்காது, புரிகிறதா? என்றார்.

சீடனுக்கு எல்லாம் புரிந்தது!

இவன் என்ன சொல்கிறான் அவன் என்ன சொல்கிறான் என்பதை கவனித்துக்கொண்டு கவலைப்பட்டுக்கொண்டிருப்பவனால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது.

– சுவாமி விவேகானந்தர்



# மார்கழியும் சிதம்பரமும்

சிதம்பரம் ஸ்ரீ நடராஜ ராஜர் என்றும், எப்பொழுதும் திருநடனம் புரிந்து கொண்டிருப்பதால், தினம் தினம் திருநாள் தான், தினம் ஒரு உத்ஸவம் தான். சிதம்பரத்தின் மஹோத்ஸவங்களில் மிக முக்கியமானதும், மணி மகுடம் போன்றதும் விளங்குவது மார்கழி ஆருத்ரா தரிசனம். கைலாய மலை பனி படர்ந்தது. அங்கு வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு உகந்த, பனி சூழ்ந்த ஹேமந்த ருதுவாகிய மார்கழி மாதத்தில், சிவபெருமானுக்கு உரிய திருவாதிரை நட்சத்திரம் இணையும் நாள் மஹா உத்ஸவத்தின் உச்சகட்ட நிகழ்வு. மார்கழி ஆருத்ரா தரிசன தினத்தின் மதியப் பொழுதில் (ஸ்ரீ நடராஜ ராஜர் பகல் வேளையில் தான் தன் கணங்கள் அனைத்தோடும் வந்திறங்கினார்) சித்ஸபா பிரவேசம் எனும் பொன்னம்பலம் புக்கும் காட்சியே பெரும் புண்ணியங்களை அளிக்க வல்லது.

மார்கழி ஆருத்ரா தரிசன மஹோத்ஸவம் கொடியேற்ற நிகழ்ச்சியுடன் துவங்கி (14.12.2018 8.30 am 9.30 am) அதைத் தொடர்ந்து, உத்ஸவ யாகசாலையில் காலை மாலை இரு வேளைகளிலும், மிகச் சிறப்பு வாய்ந்த ஹோமங்கள் செய்து, ஒவ்வொரு நாள் இரவிலும் மற்றும் காலையிலும், உத்ஸவ நாயகர்களாகிய ஸ்ரீ ஸோமாஸ்கந்தர், ஸ்ரீ சிவானந்த நாயகி, ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமண்யர், ஸ்ரீ சண்டிகேஸ்வரர் நாதஸ்வர இசை முழங்க, வேத பாராயணம் முழங்கிட வீதி வலம் வந்து காட்சி நல்குவார்கள். ஒவ்வொரு நாளிலும் ஸ்ரீ ஸோமாஸ்கந்தர், ஸ்ரீ சிவானந்த நாயகி சிறப்பு வாய்ந்த வாகனங்களில் வலம் வருவார்.

14.12.2018 தங்கத்தினாலான மஞ்சம்,

15.12.2018 சந்திர பிரபை,

16.12.2018 சூர்ய பிரபை,

17.12.2018 பூத வாகனம்,

18.12.2018 கோபுரம் எனும் தெருவடைச்சான் என்று அழைக்கப்படக்கூடிய ரதம் (கோபுர வடிவத்திலான, தெரு முழுவதும் அடைத்து வரக்கூடிய விதத்தில் அமைந்தது)

19.12.2018 யானை வாகனம்,

20.12.2018 தங்க கைலாய மலையெடுத்த வெள்ளி ராவணன் வாகனம் (மிக அற்புதமான அமைப்பு, ராவணன் உருவம் வேறு எங்கும் இல்லாத வகையில் ஒன்பது தலைகளும், கையில் ஒரு தலையை வீணையின் தலைப்பாகமாக அமைத்து காம்போதி ராகம் மீட்டும் வகையில் அமைந்தது) வலம் வந்து அருள்பாலிப்பார்.

21.12.2018 எட்டாம் திருநாளில் பிக்ஷாடனராக வலம் வருவார்.

22.12.2018 ஒன்பதாம் திருநாள் தேர் உத்ஸவம்.

23.12.2018 பத்தாம் திருநாள் ஆருத்ரா தரிசன மஹோத்ஸவம்.

24.12.2018 முத்துப்பல்லக்கில் வீதியுலா.

## மாணிக்க வாசகர் தரிசனம்:

சமய நால்வர்களில் முக்கியமானவர், காலத்தால் முந்தையவர் ஸ்ரீ மாணிக்கவாசகர். பாண்டிய மன்னரின் மந்திரியாக பதவி வகித்து, கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியால் ஆட்கொள்ளப்பட்டு, பெரும் சிவத் தொண்டு ஆற்றியவர்.

இவருக்காகவே, சிவபெருமான் நரிதனை பரியாக்கி, வைகையை பெருக்கச் செய்து, பிட்டுக்கு மண் சுமந்து போன்ற திருவிளையாடல்களை நிகழ்த்தியவர்.

இறைவனாலேயே மணிவாசகர் என்று போற்றப்பட்டவர். தில்லையின் அம்பலத்தினுள்ளே இரண்டறக் கலந்தவர். இவரின் திருவாசகத்துக்கு உருகாதவர் யாருமில்லை. திருவாசகம் நெஞ்சை நெக்குருகச் செய்யும் விதத்தில், ஒவ்வொரு வாசகமும் மாணிக்கம் போன்ற அழகுற அமைந்தமையால், மாணிக்கவாசகர் என்று போற்றப்படுபவர். இவர் எழுதிய திருவெம்பாவை மார்கழி மாதத்தில் மிகச் சிறப்பாக பாடப்பெறும்.

சிதம்பரத்தில், மாணிக்கவாசரின் தனிச் சிறப்பு மிக்க விக்ரஹத்திற்கு இந்த மஹோத்ஸவ காலத்தில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படும்.

இங்கு மட்டுமே மாணிக்க வாசகரின் கைகள் மற்ற ஆலயங்களில் உள்ளது போல் அல்லாமல், தெய்வங்களுக்கு உரிய சின் முத்திரையோடு அமைந்திருக்கும். இங்கு மட்டுமே மாணிக்கவாசகர் தெய்வத்திற்கு நிகராக கருதப்பட்டு, வழிபாடு செய்யப்படுகிறார்.

மார்கழி மஹோத்ஸவத்தின் பத்து தினங்களிலும், மாணிக்க வாசகர் தனி மஞ்சத்தில் எழுந்தருளிச் செய்து, பொன்னம்பலத்திற்கு அடுத்த கனகசபையின் வாசலில், ஸ்ரீ நடராஜருக்கு எதிரே நிற்கச் செய்து, மிக சிறப்பான வழிபாடுகள் செய்யப்படும்.

மாலை வேளை சாயரக்ஷை எனும் ஸாயங்கால காலபூஜை முடிந்தபிறகு,





மாணிக்கவாசகருக்கு சிறப்பு ஆராதனைகள் செய்யப்படும். அவருடைய திருவெம்பாவை பாடல்கள் பாடப்பட்டு, ஒவ்வொரு பாடல் முடிவிலும் சிறப்பு நிவேதனங்கள் நைவேத்யம் செய்யப்பட்டு, தீபாராதனை நடைபெறும். இருபத்தோரு தீபாராதனைகளோடு நடைபெறும் இக்காட்சி மாணிக்கவாசகர் தீபாராதனை என அழைக்கப்படும். தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்த பூஜையைக் காண எண்ணற்ற பக்தர்கள் பார்த்து மகிழ்வார்கள்.

மறுநாள் காலை பஞ்சமூர்த்திகள் (ஸ்ரீ ஸோமாஸ்கந்தர், ஸ்ரீ சிவானந்த நாயகி, ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமண்யர், ஸ்ரீ சண்டிகேஸ்வரர்) திருவீதி வலம் வரும்போது, மாணிக்க வாசகர் ஸ்ரீ ஸோமாஸ்கந்தரை வணங்கியவாறே பின் நோக்கி வலம் வரும் காட்சி மிகவும் அற்புத மானது.

தேர்த் திருநாளின் (22.12.2018) அதிகாலை 05.00 மணியிலிருந்து 05.30 மணிக்குள் ஸ்ரீ சிவகாமசுந்தரி ஸமேத ஸ்ரீ நடராஜ ராஜர் அழகுமிகு அரிய அணிமணிகளுடன் அலங் காரம் செய்யப்பட்ட திருக்கோலத்தோடு யாத்ராதான நிகழ்ச்சியாக சித்ஸபையின் கனகசபையிலிருந்து தேருக்குப் புறப்படும் திருக்காட்சி நடைபெறும்.

தேர் மிக அழகிய வடிவம் வாய்ந்தது. மிக உயர்ந்த தோற்றம். ரதலக்ஷணம் எனும் சாஸ்திர முறைப்படி சக்கரங்கள், ஆர் தட்டு, பார், கொடிஞ்சி, கூம்பு, கிடுகு முதலியவற்றால் ஆனது. தேரிலுள்ள மர சிற்பங்கள் மிக நுணுக்கமான வேலைப்பாடுகளைக் கொண்டது. சிவலீலைகளின் காட்சிகள் மிக அற்புதமாக செதுக்கப்பட்டிருக்கும். தேரின் நடுவில் உள்ள ஊஞ்சலில் நடராஜர் அமர்த்தப்படுவார்.

தேரில் அமர்த்தியபிறகு, சிறப்பு ஆராத னைகள் நடைபெற்ற பிறகு, சேந்தனாரின் திருப்பல்லாண்டு பாடல்கள் இசைக்க, வேத கோஷங்கள் முழங்க, திருமுறைகள் ஓதப்பட, நாதஸ்வரம் இன்னிசைக்க, உற்சாக கோஷங்கள் நிரம்ப, உலுக்கும் மரம் எனும் நெம்புகோல் வடிவம் தேரை உந்தித் தள்ள, உத்ஸவத்தின் மிக முக்கிய கட்டம் இனிதே தொடங்கும்.

நடராஜரின் ஆட்டத்திற்கு தாளம் இசைப்பது போல தேரில் இருக்கும் மணிகள் ஒலியெழுப்பும். நடராஜரின் முன் தோற்றத்தை ரசிப்பவர்களைப் போல, அழகுமிகு பின் தோற்றத்தை கண்டு ரசிப்போரும் உண்டு. தேர் தரிசன உத்ஸவத்தில் மட்டுமே பின் தோற்றத்தை கண்டு ரசிக்கமுடியும்.

கருநிற இரண்டு (நடராஜர் – சிவகாமசுந்தரி) தேர்களும் ஒன்றன் பின் ஒன்றாக வருவது





இரு யானைகள் அழகாக அசைந்து அசைந்து வருவதைப் போன்ற இக்காட்சியை காணும்போது, காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன் என்ற திருநாவுக்கரசர் கூறியதே நினைவுக்கு வருகின்றது.

பொதுவாக இலக்கியங்களில், தெய்வங் களை யானைக்கு ஒப்பிடுவது இயல்பானது. கம்பர் தனது ராமாயணத்தில், ராமரை அறி முகப்படுத்தும் காட்சியில், யானையை உருவகப் படுத்துகின்றார்.

புலவர் கீரன் இதற்கு ஒரு அழகான விளக்கம் தருவார். யானையின் பலத்தையோ அல்லது நிறத்தையோ ஒப்பிடப்படுவதில்லையாம். யானையின் குணாதிசயத்தை விளக்குகின்றது என்பார் புலவர் கீரன். யானையின் காலைப் பிடித்தால் தான் அதன் உதவியோடு தலை யில் ஏறமுடியும். அதுபோல தெய்வத்தின் கால டியில் சரணடைந்தால் மிக உயர்ந்த இடமாகிய மோட்சம் கிடைக்கும் என்பதை உணர்த்தவே தெய்வங்களை யானைக்கு உருவகப்படுதுகின்றனர்.

யானையின் வளைந்த காலைப் பிடித்து அதன் தலையில் ஏறுவதைப் போல, நடராஜரின் வளைந்த திருப்பாதமாகிய குஞ்சிதபாதத்தை சரணடைந்தால், மிக உயரிய பேறு கிடைக்கும் என்பது திண்ணம்.

மதியம் உச்சிகால பூஜை தேரிலேயே நடை பெற்று நிலைபெறும். சற்றே இடைவெளிக்குப் பிறகு, செம்படவர் மண்டகப்படி எனும் மீனவர்கள் எடுத்துவரும் மண்டகப்படி எனும் மரியாதைகளை நடராஜர் ஏற்று பிறகு தேர் மறுபடி கிளம்பி, ஈசான திசை திரும்பி, தேர் கிளம்பிய இடத்திற்கே வந்து நிலைபெறும்.

தேரிலேயே சாயரக்ஷை மாணிக்கவாசகர் தீபாராதனை விசேஷ நிவேதனங்களுடன் நடைபெறும்.

தேரிலிருக்கும் தெய்வங்கள் கோயிலினுள்ளே ஆயிரங்கால் மண்டபத்தில் வரவழைக்கப்பட்டு, ஒரே நேரத்தில் நூறு தீக்ஷிதர்கள் நின்று, ஏக கால லக்ஷார்ச்சனை நடைபெறும்.

ஆயிரங்கால் மண்டபம் மிக பிரம்மாண்ட மானது. ஆயிரம் தூண்கள் கொண்டது. மண்டபத் தினுள்ளே விதானம் எனும் மேற்கூரையில் உள்ள ஓவியங்கள் சிதம்பர புராணத்தைப் பகிரும் விதத் தில் வரையப்பட்டது. ஆடல்வல்லானின் அழகு மிகு நடனக் காட்சிகள், சித்தர் பீடங்கள் முதலான ஓவியங்களைக் காண கண்கள் கோடி வேண்டும். ஒவ்வொரு படமும் ஒரு கதை சொல்லும்.

அதன் பின், ஆருத்ராபிஷேக ஹோம பூஜைக ளுடன், மஹாபிஷேகம் நடைபெறும். அபிஷேக திரவிங்கள் பெருமளவில் சேகரிக்கப்பட்டு சுமார் இரண்டு மணி நேரம் ஸகல திரவிய அபிஷேகமாக நடத்தப்படும். இறுதியில் புஷ்பாஞ் சலி எனும் பலவித மலர்களால் நடராஜருக்கு அபிஷேகம் செய்யப்படும்.

அரிய அணிமணிகள் கொண்டு அலங்கரிக் கப்பட்ட நடராஜருக்கு அர்ச்சனை ஆராதனைகள் நடத்திய பிறகு, பஞ்சமூர்த்திகள் வீதியுலா வந்தபிறகு, மதிய வேளையில், ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து சித்ஸபைக்கு அம்பிகையும், ஈசனும் திருநடனம் புரிந்துகொண்டே செல்லும் அற்புத காட்சிதான் ஆருத்ரா தரிசனம் ஆகும்.

இந்தக் காட்சியை லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்வார்கள். தில்லையில் திருநடம் புரியம் சித்ஸபேசரின் திருநடன திருக்காட்சியைக் கண்டவர்கள் பெரும் பேறு பெற்றவர்களாவார்கள்.

நி.த.நடராஜ தீக்ஷிதர்
சிதம்பரம் ஸ்ரீ நடராஜர்
ஆலய மேனேஜிங் டிரஸ்டி – பூஜை
Mobile: 94434 79572, 93626 09299.

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
ஆன்மிகமலர் .காம்
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

# மன அழுத்தம், தீய எண்ணம் அதீத பாலியல் எண்ணம் போன்றவற்றை தீர்க்க உதவும்

# உப்பு நீர் நிவாரணம்



உடல்ரீதியான மற்றும் மனோரீதியான நோய்களின் சிகிச்சையில், ஆன்மீக நிவாரணங்களோடு வழக்கமான மருத்துவ சிகிச்சையையும் தொடருமாறு SSRF அறிவுறுத்துகிறது.

வாசகர்கள் எந்த ஆன்மீக நிவாரணத்தையும் சுயமாக தீர்மானம் செய்த பின் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### 1. உப்பு நீர் நிவாரணம் என்றால் என்ன?

ஆவிகள் (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) அவற்றின் சூட்சும கருப்பு சக்தியின் மூலம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி, கஷ்டங்களை உருவாக்குகின்றன. கருப்பு சக்தியானது மனஅழுத்தம், தெளிவற்ற சிந்தனை அல்லது உடலுறுப்பு கோளாறு போன்ற பிரச்சினைகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், போதை பழக்கம், நிதி பிரச்சனைகள் அல்லது நெஞ்சுவலி போன்ற சிரமங்களுக்கும் முறையே வழிவகுக்கும்.

கருப்பு சக்தி: தீய சக்திகள் பயன்படுத்தும் பிரதான ஆயுதமான கருப்பு சக்தி, உலகத்தில் நிகழும் எந்த ஒரு செயலையும் கையாளக்கூடிய திறன் உடைய ஒரு ஆன்மீக சக்தியாகும். இந்த திறன், தாக்கும் தீய சக்தியின் வலிமையை பொருத்தது. ஆவிகள், தாங்கள் இலக்காக கொண்ட நபர்களின் மீது கருப்பு சக்தியை அனுப்பி, அவர்களின் உடலில் பெருமளவு கருப்பு சக்தியை சேகரித்து வைக்கின்றன. இந்த கருப்பு சக்தியை ஆன்மீக பயிற்சி போன்ற பொதுவான ஆன்மீக நிவாரணம் அல்லது உப்பு நீர் நிவாரணம் போன்ற குறிப்பிட்ட நிவாரணத்தால் மட்டுமே அழிக்க முடியும். மற்ற வழிகளில் இந்த கருப்பு சக்தியிலிருந்து விடுபடுவது கடினம்.

உப்பு நீர் நிவாரணம் என்பது, நமது உடலில் உள்ள கண்ணுக்குத் தெரியாத, தீங்கு விளைவிக்கும் கருப்பு சக்தியை எதிர்த்து அதனை வெளியேற்றும் ஒரு எளிய ஆனால் சக்திவாய்ந்த ஆன்மீக நிவாரணமாகும். இவ்வாறு செய்வதன் மூலம், நமது ஆன்மீக பயிற்சி இந்த கருப்பு சக்தியை எதிர்ப்பதில் வீணாகாமல், நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

### 2. நாம் எப்பொழுது உப்பு நீர் நிவாரணத்தை பயன்படுத்துவது?

நாம் ஒவ்வொருவரும், ஆவிகளால் பல்வேறு அளவுகளில் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இதன் விளைவாக, நம் அனைவர் உடலிலும் ஓரளவு கருப்பு சக்தி தங்கி உள்ளது. தினசரி இந்த உப்பு நீர் நிவாரணத்தை செய்வதன் மூலம், இந்த கருப்பு சக்தியை நமது உடலில் இருந்து அகற்றலாம். குறிப்பாக, கீழ்க்கண்ட சில அறிகுறிகளை நாம் உணரும் போது இந்த உப்பு நீர் நிவாரணத்தை செய்ய வேண்டும்:

- சோம்பல்
- எதையும் குறித்த நேரத்தில் செய்ய இயலாமை
- சிந்திக்க இயலாமை
- அதிகப்படியான எண்ணங்கள், குறிப்பாக எதிர்மறையான தன்மை உடையவை
- கோபம் அல்லது வேறு தீவிரமான உணர்ச்சி

ஆவியால் பீடிக்கப்பட்டதால் ஒருவருக்கு மனஅழுத்தம் ஏற்படுவது




வரைபடம்–1

- மன அழுத்தம்
- எந்தவொரு உடல்ரீதியான வியாதி

மேலே குறிப்பிட்ட அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றை நாம் உணரும்போது, உடல்ரீதியாகவோ, உணர்வுரீதியாகவோ அல்லது ஆன்மீக ரீதியாகவோ பலவீனமாக உள்ளோம். ஆவிகள் இந்த பலவீனமான நிலையை பயன்படுத்திக்கொண்டு நம்மை தாக்கி, கருப்பு சக்தியை மேலும் நம் உடலில் செலுத்தி, இந்த அறிகுறிகளை மேலும் அதிகரிக்கின்றன.

ஒரு ஆவி ஒருவருக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்துவதை காட்டும் சூட்சும ஞானம் கொண்டு வரையப்பட்ட (வரைபடம் 1) கொடுக்கப்பட்டுள்ளது.

ஆவியைப் பற்றி சூட்சும ஞானம் கொண்டு வரையப்பட்ட இந்த வரைபடத்தை சுற்றி பாதுகாப்பு எல்லைக்கோடுகள் போடப்பட்டுள்ளது?

குறிப்பு: ஒவ்வொருமுறையும் நாம் பலவீனமான நிலையில் உள்ளபோது (குறிப்பாக ஆன்மீக நிலையில்), நாம் ஆவிகளின் தாக்குதலுக்கு சுலபமான ஒரு இலக்காகிறோம். இந்த பலவீனமான நிலையில், ஆவிகள் (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) நம்மை தாக்குவதற்கு குறைந்த சக்தியே தேவைப்படுகின்றது.

தீவிரமான கஷ்டத்தின் போது, நாம் இந்த உப்பு நீர் நிவாரணத்தை தினமும் 2–3 முறை, 2–3 மணி நேர இடைவேளைகளில் செய்வது சிறந்த பயனை தரும்.

### 3. இந்த உப்பு நீர் நிவாரணத்திற்கு தேவைப்படும் பொருட்கள்

- ஒரு பெரிய அளவு வாளி
- நமது கணுக்கால்கள் மூழ்குவதற்கு தேவையான அளவு நீர் வாளியில் நிரப்பப்பட (50% வரை) வேண்டும்.
- கல் உப்பு
- கல் உப்பு கிடைக்கவில்லையெனில் கடலுப்பு படிகங்கள்/மேசை உப்பு பயன்படுத்தலாம். எனினும் இதனால், நிவாரணத்தின் அளவு கல் உப்பை பயன்படுத்தும் போது கிடைக்கும் நிவாரணத்தின் அளவில் 30% ஆக குறைந்து விடுகிறது.
- ஒரு துண்டு
- ஒரு மிதியடி

www.aanmeegamalar.com

### ஆறாவது அறிவைக் கொண்டு காணப்பட்ட உப்பு நீர் நிவாரணத்தின் விளைவுகள்

**முதல் 5 நிமிடங்கள்**

இந்த நபரின் பாதங்கள் உப்பு நீரை தொட்டவுடன், அவரின் இடுப்புக்கு கீழுள்ள பகுதியில் தங்கியிருந்த கருப்பு சக்தியானது குறைய ஆரம்பித்தது. பின்னர், ஆவியால் உடம்பில் உருவாக்கப்பட்ட மையங்களும் பாதிக்கப்பட்டன.

**இரண்டாவது 5 நிமிடங்கள்**

நிவாரணமானது தோல் பகுதியை மிக அதிகமாக பாதித்தது. ஆவிகளால் வடிவமைக்கப்பட்ட யந்திரத்தின்1 கருப்பு சக்தி கால் முட்டி வரை மற்றும் உள்ளங்கால்களில் அழிக்கப்பட்டது மற்றும் காலிலுள்ள வலி கணிசமாக குறைந்தது.




**மூன்றாவது 5 நிமிடங்கள்**

நிவாரணத்தின் விளைவுகள் அந்த நபரின் ஸ்தூல மற்றும் சூட்சும உடல்களில் காணப்பட்டது. தலை, தொண்டை, வயிறு மற்றும் முதுகில் சேகரிக்கப்பட்டிருந்த கருப்பு சக்தி உப்பு நீருள் உறிஞ்சப்பட்டது. இதன் விளைவாக, அந்த நபர் தன்னுடலில் லேசான தன்மை மற்றும் மனதில் புத்துணர்ச்சியை உணர்ந்தார்.

குறிப்பு:

1 யந்திரம் என்பது குறிப்பிட்ட விதத்தில் வடிவமைக்கப்பட்ட ஒரு ஆன்மீக வரைபடம் ஆகும். ஒவ்வொரு யந்திரமும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உதவுகிறது. உதாரணமாக, ஸ்ரீ யந்திரம் செழிப்பை அளிக்கிறது. ஆவிகள், குறிப்பிட்ட தீங்கை விளைவிக்க, பாதிக்கப்பட்ட நபர்களின் உடலில் சூட்சும யந்திரங்களை உருவாக்குகின்றன.

வரைபடம்–2

## 4. உப்பு நீர் நிவாரணம் எவ்வாறு செய்யப்படுகின்றது?

முன்னேற்பாடு:

- கணுக்கால் மூழ்கும் அளவிற்கு வாளியில் (50% வரை) நீர் நிரப்பவும். இரண்டு மேசைக்கரண்டி கல் உப்பு அதில் சேர்க்கவும்.
- உங்களிடம் உள்ள கருப்பு சக்தியை வெளியேற்ற, கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக் கையுடன் பிரார்த்தனை செய்யவும். மேலும், குறிப்பாக, உங்களை தாக்கும் ஆவிகளின் (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) கருப்பு சக்தியை அழிப்பதற்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும். இந்த நிவாரணத்தின் திறனை மேம்படச் செய்வதில் பிரார்த்தனை ஒரு முக்கியமான காரணியாகும்.

நிவாரணம்:

- கால்கள் உப்பு நீரில் மூழ்குமாறு நிமிர்ந்து உட்காரவும். இரண்டு பாதங்களுக்கும் இடையில் 23 செ.மீ இடைவேளையாவது இருக்க வேண்டும். இது கருப்பு சக்தி அதிக அளவில் வெளியேறுவதற்கு உதவுகிறது. பாதங்கள் ஒன்றுக்கொன்று தொடுவதால், கருப்பு சக்தி பாதங்களின் வழியே வெளியேறுவதில் தடங்கல் ஏற்படுகின்றது.
- உப்பு நீரில் பாதங்களை 1015 நிமிடங்கள் வரை வைக்கவும்.
- பாதங்கள் மூழ்கியிருக்கும்போது, உங்களின் மதத்தின் படி கடவுளின் நாமத்தை ஜபம் செய்யவும்.

முடிவில்:

- நிவாரணம் முடிந்த பிறகு, கடவுளுக்கு நன்றி செலுத்தவும் மற்றும் உங்களை சுற்றி பாதுகாப்பு வளையத்தை உருவாக்கக் கோரி பிரார்த்தனை செய்யவும்.
- பிறகு, வாளியில் உள்ள நீரை கழிப் பறையில் ஊற்றிவிட்டு, சுத்தமான நீரைக் கொண்டு வாளியைக் கழுவவும்.
- உங்களின் மதத்தின் படி கடவுளின் நாமத் தை 23 நிமிடங்கள் ஜபம் செய்யவும்.





### தூனியக்காரியின் கருப்பு சக்தியால் உருவாக்கப்பட்ட அதீத பாலியல் சிந்தனைகளை அகற்றுவதற்கான நிவாரணமாக உப்பு நீர் உபயோகிக்கப்படுகின்றது




வரைபடம்–3

## 5. தீய சக்தியை வெளியேற்றுவதில் உள்ள தத்துவம் என்ன?

1. நாமஜபம் மற்றும் பிரார்த்தனை, ஆவிகள் மூலம் நமது உடலில் பல்வேறு பகுதிகளில் உருவாக்கப்பட்ட கருப்பு சக்தியை சிதைவடைய செய்து அவற்றை வெளியேற்றுகிறது.
2. உப்பு நீருக்கே (கல் உப்பு கரைந்த நீர்) கருப்பு சக்தியை உறிஞ்சி வெளியேற்றும் தன்மை உள்ளது.
3. கருப்பு சக்தி வெளியேறும்போது, கொட்டாவி விடுதல், ஏப்பம் விடுதல், கால்கள் மறத்துபோதல், கண்கள் மற் றும் காதுகளில் வெப்பத்தன்மையை உணர்தல் போன்ற சில அறிகுறிகளுடன் வெளியேறலாம். சில நேரங்களில், மூழ்கிய பாதங்களில் ஏதோ ஊர்ந்து செல்லும் உணர்வை பெறலாம். இது கருப்பு சக்தி வெளியேறுவதன் அறிகுறியாகும். சில நேரங்களில், உப்பு நீர் நிவார ணத்திற்கு பிறகு அந்த உப்பு நீர் கருமையாக மாறுவதையோ அல்லது துர்நாற்றம் வீசுவதையோ அல்லது சில நேரங்களில் அந்த நீர் வெதுவெதுப்பாக மாறுவதையோ கவனிக்கலாம். இந்த மாறுதல்கள் அனைத்தும் உடலி லிருந்து வெளியேறும் கருப்பு அதிர்வலை களின் தொடர்பால் ஏற்படுகின்றன.

### 5.1 கல் உப்பிற்கு பதிலாக எப்சம் உப்பு பயன்படுத்தலாமா?

எப்சம் உப்பு என்பது மெக்னீசியம் சல்பேட், ஆனால் கல் உப்பு சோடியம் குளோரைடு, இது முற்றிலும் வேறுபட்டது. எப்சம் உப்பு உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயப்பதாக அறியப்பட்டிருந்தாலும், உடலில் இருந்து கருப்பு சக்தியை வெளியேற்றும் கண் ணோட்டத்தில் எப்சம் உப்பிற்கு எந்த திறனும் இல்லை.

### 6.1 உண்மையில் உப்பு நீர் நிவாரணத்தின் போது சூட்சுமமாக என்ன நடக்கின்றது?

ஆவிகளால் (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) பாதிக்கப்பட்ட ஒரு நபர் உப்பு நீர் நிவாரணம் செய்யும்போது, அந்த ஆவி மற்றும் அதன் கருப்பு சக்திக்கு ஏற்படும் விளைவுகளை அதிநுட்பமான ஆறாவது அறிவு (ணிஷிறி) கொண்ட ஸாதகரான மதுரா போசலே, பின்வருமாறு உணர்ந்தார்.

### 6.2 சூட்சும ஞானத்தை கொண்டு வரையப்பட்ட கருப்பு சக்தி அகற்றப்படும் (வரைபடம் 2)

வரைபடம் 3ல் வரையப்பட்ட படமானது, ஒரு நபருக்கு அதீத பாலியல் எண்ணங்களை உருவாக்கிய ஒரு சூனியக்காரியின் (chet-kin) கருப்பு சக்தியின் மீது உப்பு நீர் சிகிச்சை ஏற்படுத்தும் விளைவுகளை, சூட்சும ஞானத்தை கொண்டு வரைந்த படமாகும்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626

# சிவபெருமானின் சிவத்தாண்டவங்கள்

சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களைச் செய்யும் போது காளிகா, சந்தியா, சங்கார (சம்ஹார) தாண்டவம் ஆடியதாகக் கூறப்படுகிறது.

1. காளிகா தாண்டவம் படைத்தல் செய்யும் போது. தலம் நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி. ஆடிய இடம் தாமிர சபை.
2. சந்தியா தாண்டவம் காத்தல் செய்யும் போது. தலம் மீனாட்சி அம்மன் கோவில்,மதுரை. ஆடிய இடம் வெள்ளி அம்பலம்.
3. சங்கார தாண்டவம் அழித்தல் செய்யும் போது. தலம் மதுரை
4. திரிபுர தாண்டவம் மறைத்தல் செய்யும் போது. தலம் குற்றாலநாதர் கோவில், குற்றாலம். ஆடிய இடம் சித்திரசபை.
5. ஊர்த்தவ தாண்டவம் அருளல் செய்யும் போது. தலம் ஊர்த்தவதாண்டவர் கோவில், திருவாலங்காடு, ஆடிய இடம் இரத்தின சபை.
6. ஆனந்த தாண்டவம் இவ்வைந்து செயல்களையும் செய்யும் இடம். தலம் நடராஜர் கோவில், சிதம்பரம். ஆடிய இடம் கனக சபை.
7. கௌரி தாண்டவம் பார்வதிக்காக ஆடிய போது. தலம் திருப்பத்தூர்.
8. அஜபா நடனம் சிவபெருமான் மேல்மூச்சில், கீழ்மூச்சில் (தவளை போல்) அசைந்தாடிய நடனம். ஆடிய தலம் திருவாரூர்.
9. சிவபெருமான் பித்தனைப் போல் தலை சுற்றி ஆடிய நடனம் உன்மத்த நடனம் ஆகும். ஆடிய தலம் திருநள்ளாறு.
10. தரங்க நடனம் என்பது கடல் அலைபோல் அசைந்து ஆடுவது. இதை சிவபெருமான் நாகப்பட்டினத்தில் ஆடினார்.
11. குக்குட நடனம் என்பது கோழி போல் ஆடுவது. ஆடிய தலம் திருக்காறாயில்.
12. பிருங்க நடனம் என்பது வண்டு மலரைக் குடைவது போல் ஆடுவது. இதை சிவபெருமான் ஆடியது இடம் திருக்கோளிலி ஆகும்.
13. கமல நடனம் என்பது தாமரை காற்றில் அசைவது போல் ஆடுவது. ஆடிய தலம் திருவாய்மூர்.
14. ஹம்சபாத நடனம் என்பது அன்னம் போல் அடியெடுத்து ஆடுவது. ஆடிய தலம் திருமறைக்காடு (வேதாரண்யம்)








# பழநி பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம்





தைப்பூசத்தையொட்டி, பழநிக்கு பாதயாத்திரை வரும் பக்தர்களுக்காக, ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் சன்னதி அருகே, எல். என். திருமண மண்டபத்தில், 'பழநிமுருகன் அன்னதானக் குடில்' அமைக்கப்பட்டுள்ளது.
சென்னையை சேர்ந்த, சிறுவாபுரி முருகன் புகழ்பாடும், அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழு, ஒன்பதாம் ஆண்டாக இந்த குடிலை, அமைத்துள்ளது.
ஜனவரி, 18ம் தேதி மாலையில் பக்தி இன்னிசை, கூட்டு வழிபாடுடன் அன்னதானம் துவங்குகிறது.
19ம் தேதி காலை, 9:00 மணிக்கு மஹா சக்தி வேல்பூஜை வேல் மாறல் பாராயணம் நடக்கிறது.
பக்தர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவ முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அன்னதானத்தில் பங்கேற்க விரும்புபவர்கள், சேவையாற்ற விரும்புபவர்கள்,
தொடர்புக்கு: 099443 09719 / 098421 98889

# இறைவனுடைய சித்தம் உங்களிடம் சொல்ல இருப்பதை கவனமாகக் கேளுங்கள்

48 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "சத்தியத்தைப் பற்றிய என் சொந்த அனுபவத்திலிருந்து நான் உங்களிடம் பேசுகிறேன்.

ஓர் ஆன்மீக கிளிப்பிள்ளை கூறுவதை நீங்கள் கேட்க விரும்புவதில்லை. இறைவனுடைய சித்தம் உங்களிடம் சொல்ல இருப்பதை கேட்க நீங்கள் விரும்புகிறீர்கள். நான் உங்களுக்கு என்ன கூறுகிறேனோ, அது அவனிடமிருந்து வருகிறது. அத்துடன் அது உங்களுடைய மிக உயர்ந்த நலனுக்காகவே. நான் விற்பனைக்காகச் சொல்லவில்லை; என்னை விலைக்கு வாங்க முடியாது. உங்களுக்கு சேவை செய்வதற்காக நான் இங்கு வந்தேன். இறைவன் என்னை அழைக்கும்பொழுது, நான் சென்று விடுவேன். உங்களுக்கு உண்மையைக் கொடுப்பதற்காக மட்டுமே நான் இங்கு இருக்கிறேன் அதை யார் பெற்றுக் கொள்கிறார்களோ, அவர்களைப் பற்றி நான் சந்தோஷப்படுவேன். நான் ஆயிரக்கணக்கானவர்களுக்குமுன் பேசியிருக்கிறேன். ஆனால் இந்த ஆலயம் மற்றும் இந்தச் சூழ்நிலைக்காகவும், மேலும் இறைவனைத் தேடுவதற்கான உங்களுடைய விருப்பத்தில் உண்மையாக இருக்கும் உங்களுக்காகவே நான் இருக்கிறேன் என்று நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன். யார் இறைவனை நோக்கிச் செல்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி மிகவும் சிறப்பாக இருக்கும்.



இங்கு உங்களோடு இந்த ஆன்மாக்களின் தோட்டத்தில் இறைவனைப்பற்றி உங்களிடம் பேசுவது என்னுடைய கடமையும் சிறப்புரிமையுமாகும். நீங்கள் இந்த இடங்களில் நுழையும்பொழுது தீயதைப் பேசவேண்டாம், தீயதைத் கேட்க வேண்டாம், எதிர்மறையான எதையும் பார்க்கவேண்டாம். நீங்கள் இங்கு எப்பொழுதும் இருக்கும் புனிதமான அதிர்வலைகளை உணர்வீர்கள். நான் இங்கு ஒருபோதும் எதிர்மறையான எதையும் பேசியதில்லை. அதனால்தான் இந்த அதிர்வலைகள் மிகவும் தூய்மையாக இருக்கின்றன. நீங்கள் கடைபிடிக்க வேண்டுமென நான் விரும்புவது இதையும் கூட ஆக்கபூர்வமாகவும் தூயமனதோடும் இருப்பது ஏனென்றால் இத்தகைய மனக்கோயில்களில் இறைவன் வந்து குடியிருக்க விரும்புகிறான்.

படிப்பதாலும் தியானிப்பதாலும் உங்களில் ஒவ்வொருவரும் உங்கள் ஆன்மாவை அவனுடைய சக்தியால் செறிவூட்ட முடியும். அதனால் நீங்களும் இறைவனுடைய குரலில் பேசுவீர்கள். அந்த வகையான காந்த சக்திதான் உங்களுக்கு வேண்டும். ஒவ்வொரு நாளும் மேன்மேலும் ஆழ்ந்து தியானம் செய்யுங்கள். நீங்கள் பேராற்றல் வாய்ந்த காந்தசக்தியைப் பெறுவீர்கள்.

ஆசிரமத்திற்கு வரும் சிலர், அவர்கள், தான் தங்களையே மாற்றிக் கொள்வதற்கான தேவை உடையவர்களாக இருக்கும்பொழுது ஆரம்பத்திலிருந்தே எங்களுக்குக் கற்பிக்க முயற்சிப்பதை நான் பார்த்திருக்கின்றேன். அப்படிப்பட்டவர்கள் ஆசிரமத்திற்கு உரியவர்கள் அல்ல. நாங்கள் இணக்கத்துடனும் பணிவுடனும் உள்ளவர்களை, யோகதா சத்சங்க வழி வந்த குருமார்களின் பணிக்கு நூறு சதவீதம் ஒத்துழைப்பு கொடுப்பவர்களை வரவேற்கிறோம்.

என்னுடைய மிகப்பெரிய விருப்பம், மனிதர்களை மாற்றி அவர்களை இறைவனிடம், திருப்புவதாகும். இந்த நோக்கத்திற்காக நான் குணப்படுத்துவதின்மேல் கவனம் செலுத்துவது வழக்கம், ஆனால் உடல் குணமாக்கப்பட்டதும், மாணவர்கள் திருப்தி அடைந்து சென்றுவிடுவதைக்கண்டேன். என்னுடைய ஆர்வம் மனிதனுடைய மிகப்பெரிய வியாதியாகிய அறியாமையை குணப்படுத்திக் கொள்வதற்கு நாடுகிறவர்களிடத்தில்தான் இருக்கிறது. யார் இறைவனை விரும்பி, திறந்த மனங்களுடன் என்னிடம் வருகின்றனரோ, அவர்கள் ஒருபொழுதும் மீண்டும் பழைய நிலையில் இருக்கமாட்டார்கள். அவர்கள் ஒரு பெரிய உண்மையை உணர்வார்கள்: "இந்த 'நான்' இறக்கும்பொழுது, பிறகு நான் அறிவேன், நான் யார் என்று" இந்த உடலில் யோகானந்தா இனி மேலும் இல்லை, அவனே உள்ளான்.

இப்பொழுது என்னுடன் பிரார்த்தனை செய்யுங்கள்: " தெய்வத் தந்தையே, என்னுடைய உடலையும் மனதையும் உன்னுடைய காந்த சக்தியினால் செறிவூட்டு. நீ எனது ஆன்மாவில் நிலை பெற்றிரு. அதனால் நான் ஆன்மீக காந்த சக்தி உள்ளவனாவேன். உன் மீதுள்ள என் அன்பினால் என்னிடம் உன்னை ஈர்ப்பேன்; மேலும் உன்னில் எனக்கு எவை உண்மையில் தேவையோ அவற்றையெல்லாம் பெறுவேன். 'ஓம்'"

**அதைததப்ய சக்தோஸி கர்த்தும்**
**மத்யோகமாச்ரித:**
**ஸர்வகர்மபலத்யாகம் தத: குரு**
**யதாத்மவான்.**

இறைவனை முழுமையாக அடைக்கலமாகி அல்லது இறைவனிடத்தில் முழுமையாக தன்னை அர்ப்பணம் செய்து கிரியா யோகானுஷ்டானம் செய்வதற்கும் மனத்தூய்மை மிகவும் அவசியமாகும். உலகப்பொருட்களில் உள்ள ஆசையும் அதற்கான செயல்களும் விருப்பு வெறுப்புகளும் மதமாச்சரியவுமெல்லாம் மனதின் அழுக்குகளாகும். அவையெல்லாம் விட்டாலொழிய இறைவனிடம் அடைக்கலம் ஆக முடியாது. இறைவனிடத்தில் தன்னை அர்ப்பணம் செய்யாத ஒரு மனிதனுக்கு கிரியா யோகத்தாலும் பயன் ஏதுமில்லை. அத னால் கிரியா யோகத்தைச் செய்வதும் எளி தல்ல. அவ்வாறான ஒரு சாதக னுக்கு பரிபூர்ணமான சித்த சுத்தி ஏற்படவில்லை என்று பொருள். ஆனால் எல்லா கர்மங்களின் பலன்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்துகொண்டு கர்மத்தை செய்து சித்த சுத்தியைப் பெறத் தான் வேண்டும். இவ்வாறு கர்ம யோகானுஷ்டானத்தினால்



www.aanmeegamalar.com

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்

பொருள்மேல் வெறுப்பும் தியாக புத்தியும் அகங்காரம், பற்று இவற்றிற்கு தீர்வும் விருப்பு வெறுப்புகள் அடங்கிய சித்திற்கு சுத்தியும் தெளிவும் ஆனந்தமும் ஏற்படும். அப்பொழுது இறைவனை அடைவதற்கான கிரியா யோகத்தைச் செய்வதற்கான தகுதியும் அதனால் பக்தி ஞான வைராக்கியங்கள் வளர்ந்து ஆத்ம சொரூபியான இறைவனை அறிவதற்கும் அவனை சிந்திப்பதற்கும் அடைவதற்கும் உள்ள அனைத்து தகுதிகளும் உண்டாகும். (பகவத் கீதை அத் 12 ஸ்லோகம் 11)

முற்பிறவியிலுள்ள சாதனைகளைச்செய்த பின்னர்தான் தற்போதுள்ள பிறவியிலுள்ள சாதனைகளை செய்ய முடியும். இந்த ஆர்டிக் களில் கூறப்பட்டுள்ள, குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸரின் சொற்பொழிவில் பிறந்துள்ள வார்த்தைகள் கடந்தகால, நிகழ்கால, மற்றும் எதிர்காலத்தில் பலமுறை உறுதி அளிக்கின்ற வகையில் உள்ளன என்று தெரிய வருகிறது. அதுமட்டுமின்றி உறுதிப்படுத்திக் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் அனைத்தும் அவருடையதல்ல, இறைவனுடையது என்று கூறியிருக்கிறார். அவ்வாறானால் இறைவன்தான் உறுதி அளித்துள்ளார் என்பதை அறியும்போது மனம் நெகிழ்கின்றது, உடல் சிலிர்க்ககின்றது. இறைவனை நேசிக்கின்ற. இறைவனை அடைய வேண்டும் என்ற வைராக்கியம் உள்ளவர்களுக்கு குருதேவருடைய வார்த்தைகள் நன்கு பயனளிக்கக் கூடியதாக உள்ளன. குருதேவர் நம்முடன் நேரில் பேசுவது போன்றுள்ளது. என்னைப்பொறுத்தமட்டில் நான் அவர்மேல் அபிமானம் கொள்கிறேன். ஏனென்றால் இவ்வுலக வாழ்க்கையில் நாம் தேடிப்பெறவேண்டியது இறைவனை மட்டுமேயாகும். அதைத்தவிர வேறு எந்தப் பொருளுக்கும், நமது இதயக் கோவிலில் இடம் தரக்கூடாது, இந்த உறுதிப்பாடு வந்தவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இறைவனை அடைய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் வாழும் இறைவனை நேசிக்கின்ற பக்தர்களுக்கு பூஜ்ய குருதேவரின் அருள்வார்த்தைகள் உதவிகரமாக இருக்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை,

இறைவனை மறந்து, அழியக்கூடிய உலகப்பொருட்களுடன் ஐக்கியமாகி வாழும் மனிதர்களை மாற்றி இறைவன் பக்கம் திரும்பச் செய்வதற்காகத்தான் இப்புவியில் வந்திருப்பதாகக் கூறும் நம் குருதேவர் போன்று, வேறு யார் நம்மை இறைவன் பக்கம் திருப்பு வதற்



காக உழைக்கிறார்கள் ? எனவே, அவர் கூறும் வார்த்தைகளை செவி மடுத்து அதன்படி நடப்பதே நம் முதல் கடமையாகக்கொள்ள வேண்டும். அப்பொழுது அவர் நமக்காக, நம் ஆன்மாவைக் கரை சேர்ப்பதற்காக அவருடைய முழு செயல்பாடும் உள்ளது என்பதை நாம் காணலாம். அதை ஒவ் வொருவரும் அறியவேண்டும். இறைவனை அடைய விருப்பம் உள்ளவர்கள் அவர் அருளும் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வர் என நான் நம்புகிறேன்.

மேலும் குருதேவரின் அருள் வாக்குப்படி தீயதைப் பேசுபவர்களையும் செய்பவர்களையும் எதிர்மறையான காரியங்களைச் செய்பவர்களை யும் மட்டுமின்றி மனிதனாகப் பிறந்த அனைவரையும் மாற்றுவதற்காகத்தான் பூஜ்ய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ் யோகானந்தர் இப்புவியில் அவதரித்துள்ளார் என்பதை அவர் கூறியுள்ள கருத்துக் களிலிருந்து தெரிய வருகிறது.' காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக்கேற்ப நமக்கு இறைவன் அருளியுள்ள சந்தர்ப்பத்தை (மனிதப்பிறவியை) பாழாக்காமல், நம் அனைவரையும் இறைவனடி சேர்ப்ப தன் பொருட்டு குருதேவர் நமக் காகக் காத்திருக்கிறார் என்பதை உணர்ந் தறிந்து, அனைத்திற்கும் மேலான இறைவனை, பிரபஞ்சத் தந்தையை, அவனுடைய குழந்தைகளான நாமெல்லாம் அவனை அடைவதே சாலச்சிறந்ததாகும்; மாறாக உலகம் மற்றும் உலகப்பொருட்களை அல்ல !

ஜெய் குரு

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# சூரியசக்தியை பெருக்கிக் கொள்ளுங்கள்



பிரம்ம ரிஷிகளான துர்வாசர், விசுவா மித்திரர், வசிஸ்டர் போன்ற ரிஷி களின் ஆசியால் அரிய சக்தி கொண்டவர்களை தாக்குபவர்கள் அவர்களையே பன்மடங்கு தாக்கிக் கொண்டதற்கு சமமான கெடுபலன் விளையும் என ஆசி வழங்கியுள்ளதால் சூரியசக்திக்கு எதிர்சக்தி இல்லாமல் போனது. (சூரிய சக்திகாரர்கள் தன் வினையில் மட்டுமே தன்னை அழித்துக்கொள்ள முடியும்.) எனவே சூரிய வழிபாட்டின் மூலம் (சூரிய நமஸ்காரம்) சூரியசக்தியை பெருக்கிக் கொள்ளுங்கள்.

# தீயசக்திகளை விரட்டும் செம்பு

செம்பு பாத்திரத்தில் தண்ணீர் குடியுங்கள். எல்லாம் நலமாய் அமையும். தீயசக்திகளை பிறருக்கு விரட்ட செப்பு தகட்டில் கோரப்பல் தெய்வங்களின் மந்திரத்தை மனதால் தியா னித்து ஒரு முக்கோணம் கீறி முக்கோண மூன்று முனைகளிலும் சூலம் கீறி முக்கோண மத்தியில் தெய்வத்தை நினைத்து ஓம் என்று எழுதி அதை தாயத்தில் அடைத்து பாதிக் கப்பட்டவரை கட்டிக் கொள்ள சொன்னாலே போதும் தீயசக்தி விலகிவிடும்.



# நிலக்கடலை

## பல நோய்களுக்கு ஒரே தீர்வு

வேர்கடலை பெண்களுக்கு மிகச் சிறந்த உணவாகும். திருமணமான பெண்கள் நிலக்கடலையை அதிகம் எடுத்துக்கொள்ள நமது சித்த மருத்துவ முறை வலியுறுத்துகிறது. இதற்கு பல காரணங்களை அவை கூறுகிறது.

உதாரணத்திற்கு, கிராப்புறங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டிருக்கும் வயலில் அது கொட்டை வைக்கும் பருவம் வரை வயலில் எலிகள் அவ்வளவாக இருக்காது. ஆனால் நிலக் காய்பிடிக்கும் பருவத்துக்கு பிறகு எலிகள் அளவு கடந்து குட்டி போட்டிருப்பதை காணலாம். நிலக்கடலை செடியை சாப்பிடும் ஆடு, மாடு, நாய், வயல் வெளியே சுற்றி உள்ள பறவைகள் எல்லாம் ஒரே நேரத்தில் குட்டி போடுவது இதற்கு நல்ல உதாரணம்.

நிலக்கடலையில் போலிக் ஆசிட் அதிகம் இருப்பதால் கர்பிணிப் பெண்களுக்கு மிக வும் அவசியம். எனவே நிலக் கடலையை தொடர்ந்து சாப்பிடும் பெண்களின் கர்ப்பபை சீராக செயல்படுவதுடன் கர்ப்பபைக் கட்டிகள், நீர்கட்டிகள் ஏற்படாதது மட்டுமல்லாது குழந்தைப் பேறும் உடன் உண்டாகும். தினமும் பெண்கள் எடுத் துக் கொண்டால் மகப்பேறு நன்றாக இருக்கும். கருவின் மூளை மற்றும் நரம்பு வளர்ச்சி சிறப்பாக அமையும். கருத்தரிப்பதற்கு முன்பே உண்பது மிக மிக உத்தமம். இல்லையேல் கருவுற்ற பின்னும் எடுத்துக் கொள்ளலாம்.

### நீரழிவு நோயை தடுக்கும்:

நிலக் கடலை யில் மாங்கனீஸ் சத்து நிறைய உள் ளது .மாங்கனீஸ் ச த் து மா வு ச் சத்து மற்றும் கொழுப்புகள் மாற்றத்தில் முக்கிய பங்காற்றுகிறது. நாம் உண்ணும் உணவில் இருந்து கால்சியம் நமது உட லுக்கு கிடைக்கவும் பயன்படுகிறது. குறிப் பாக பெண்கள் நிலக்கடலையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் எலும்புத் துளை நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

### பித்தப் பை கல்லைக் கரைக்கும்:

நிலக்கடலையை தினமும் 30 கிராம் அளவுக்கு தினமும் சாப்பிட்டு வந் தால் பித்தப்பை கல் உருவாவதைத் தடுக்க முடியும். 20 வருடம் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வில் இந்த தகவல் தெரியவந்துள்ளது.

### இதயம் காக்கும்:

நிலக் கடலை சாப்பிட்டால் எடை போடும் என்று நாம் நினைக்கிறோம். உண்மையல்ல. மாறாக உடல் எடை அதிகமாகாமல் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களும் நிலக்கடலை சாப் பிடலாம். நிலக்கடலையில் ரெஸ்வரெட்ரால் என்ற சத்துநிறைந்துள்ளது. இது இதய வால்வுகளை பாதுகாக்கிறது. இதய நோய்கள் வருவதையும்தடுக்கிறது.



இதுவே மிகச் சிறந்த ஆண்டி ஆக்சிடென்டாக திகழ்கிறது.

### இளமையை பராமரிக்கும்

இது இளமையை பராமரிக்க பெரிதும் உதவு கிறது. நிலக்கடலையில் பாலிபீனால்ஸ் என்ற ஆண்டி ஆக்சிடென்ட் உள்ளது. இது நமக்கு நோய்வருவதை தடுப்பதுடன் இளமையை பராமரிக்கவும் பயன்படுகிறது.

### ஞாபக சக்தி அதிகரிக்கும்:

நிலக்கடலை மூளை வளர்ச்சிக்கு நல்ல டானிக் போன்றது. நிலக்கடலையில் மூளை வளர்ச்சிக்கு பயன்படும் விட்டமின் 3 நியாசின் உள்ளது. இது மூளைவளர்ச்சிக்கும் ஞாபக சக்திக்கும் பெரிதும் பயனளிக்கிறது. ரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது.

### மன அழுத்தம் போக்கும்:

நிலக்கடையில் பரிப்டோபான் என்ற முக்கிய அமினோ அமிலம் நிறைந்துள்ளது. இந்த வகை அமினோ அமிலம் செரட் டோனின் என்ற மூளையை உற்சாகப்படுத்தும். உயிர் வேதிப் பொருள் உற்பத்திக்கு பயன்படுகிறது. செரட்டோனின் மூளை நரம்புகளை தூண்டுகிறது. மனஅழுத்தத்தை போக்குகிறது. நிலக்கடைலையை தொடர்ந்து சாப்பிடுவோருக்கு மன அழுத்தத்தைப் போக்குகிறது

### கொழுப்பை குறைக்கும்

நிலக்கடலை சாப்பிட்டால் கொழுப்பு சத்து அதிகமாகும் என்று நம்மில் பலரும் நினைத் திருப்போம். ஆனால் அதில் உண்மையில்லை. மாறாக மனிதனுக்கு நன்மை செய்யும் கொழுப்பு தான் நிலக்கடலையில் உள்ளது. நிலக்கடலையில் உள்ள தாமிரம் மற்றும் துத்தநாக சத்தானது நமது உடலின் தீமை செய்யும் கொழுப்பை குறைத்து நன்மை செய்யும் கொழுப்பை அதிக மாக்குகிறது. 100 கிராம் நிலக்கடலையில் 24 கிராம்மோனோ அன் சாச்சுரேட்டேட் வகை கொழுப்பு உள்ளது. பாலிஅன்சாச்சுரேட்டேடு 16கிராம் உள்ளது.

இந்த இருவகை கொழுப்புமே நமது உடம் புக்கு நன்மை செய்யும் கொழுப்பாகும். பாதாமை விட நிலக்கடலையில் நன்மை செய்யும் கொழுப்பு அதிகமாக உள்ளது. நிலக்கடலையில் உள்ள ஒமேகா3 சத்தானது நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

### கருப்பை கோளாறுக்கு:

பெண்களின் இயல்பான ஹார்மோன் வளர்ச்சியை நிலக்கடலை சீராக்குகிறது. இத னால் பெண்களுக்கு விரைவில் குழந்தை பேறு ஏற்படுவதுடன் பெண்களுக்கு ஏற்படும் மார்பகக் கட்டி உண்டாவதையும் தடுக்கிறது. பெண்களுக்கு பெரிதும் தேவையான போலிக் அமிலம், பாஸ்பரஸ், கால்சியம், பொட்டாசியம், துத்தநாகம், இரும்பு, விட்டமின்கள், குறுட்டாமிக் அமிலம் நிலக்கடலையில் நிறைந்துள்ளது. இதன் காரணமாக பெண்களுக்கு கருப்பை கட்டிகள், நீர்கட்டிகள் ஏற்படுவதையும் தடுக்கிறது.

### நிறைந்துள்ள சத்துக்கள்:

100கிராம் நிலக்கடலையில் கீழ்கண்ட சத்துக்கள் நிறைந்துள்ளது.

கார்போஹைட்ரேட் 21 மி.கி.
நார்ச்சத்து 9 மி.கி.
கரையும் (நல்லHDL) கொழுப்பு – 40 மி.கி.
புரதம் 25 மி.கி.
ட்ரிப்டோபான் 0.24 கி.
திரியோனின் – 0.85 கி
ஐசோலூசின் – 0.85 மி.கி.
லூசின் – 1.625 மி.கி.
லைசின் – 0.901 கி
குலுட்டாமிக் ஆசிட் 5 கி
கிளைசின் 1.512 கி
விட்டமின் பி1, பி2, பி3, பி1, பி2, பி3, பி5, பி6, சி
கால்சியம் (சுண்ணாம்புச்சத்து) – 93.00 மி.கி.
காப்பர் – 11.44 மி.கி.
இரும்புச்சத்து – 4.58 மி.கி.
மெக்னீசியம் – 168.00 மி.கி.
மேங்கனீஸ் – 1.934 மி.கி.
பாஸ்பரஸ் – 376.00 மி.கி.
பொட்டாசியம் – 705.00 மி.கி.
சோடியம் – 18.00 மி.கி.
துத்தநாகச்சத்து – 3.27 மி.கி.
தண்ணீர்ச்சத்து – 6.50 கிராம்.
போலிக் ஆசிட் சத்து

### பாதாம், பிஸ்தாவை விட சிறந்தது:

நாம் எல்லாம் பாதாம், பிஸ்தா, முந்திரிப் பருப்புகளில்தான் சத்து அதிகம் உள்ளது என்று கருதுகிறோம். அது தவறு. நிலக்கடலையில் தான் இவற்றை எல்லாம் விட அளவுக்கதிகமான சத்துக்கள் உள்ளன.

# சித்த மருத்துவ பா

சித்த மருத்துவத்தைப் பற்றி நம் முன்னோர் எவ்வளவோ சொல்லிச் சென்றுள்ளனர். அந்த வகையில், அருந்தமிழ் மருத்துவம் 500 என்ற பாடலில் மிக அற்புதமாக சித்த மருத்துவத்தைப் பற்றிய மருத்துவர் பாக்கள் எழுதப்பட்டுள் ளது. இந்தப் “பா”க்களை நினைவில் வைத்துக்கொண் டால் அற்புதமான மருத்துவ பலன்களை பெறலாம்.

மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

ooo

பல்லுக்கு வேலாலன்
பசிக்குசீ ரகமிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

ooo

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

ooo

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

ooo

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

ooo

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க வெண்பூண்டே

ooo

கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!

ooo

விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை
சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை

ooo

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு
விக்கலுக்கு மயிலிறகு
வாய்ப்புண்ணிற்குமணத்தக்காளி

ooo

நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர்
நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்குநீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

ooo

தீப்புண்ணா குங்கிலியவெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவேலன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

ooo

குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான்
குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை

ooo

கக்கலுக்கு எலுமிச்சைஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

ooo

வெண்படைக்கு பூவரசு கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்சீமையகத்தி
புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு

ooo

கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்குவெங்காரபனிநீர்
கானாகடிக்கு குப்பைமேனிஉப்பே

ooo

உடல்பெருக்க உளுந்துஎள்ளு
உளம்மயக்க கஞ்சாகள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

ooo

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம்சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!

ooo



aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர் .காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# எது கொள்கை?

உணர்ச்சி. இதைப் பற்றியதே இக்கருத்து. உணர்ச்சியில்லாத மனிதன் குப்பையில் கிடக்கும் ஒரு பொருளுக்கு சமம். ஆனால் இந்த உணர்ச்சியை மனிதன் எப்பொழுது உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று யோசித்துக் கொள்ள வேண்டும் தெரியுமா? சுகபோகங்களை அனுபவிக்கும் பொழுது மட்டுமே உணர்ச்சிகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அப்பொழுது உணர்ச்சி இல்லையென்றும் மனிதன் சாப்பிடக்கூடிய பொருள்களுக்கெல்லாம் ருசி இருக்காது. அல்லது ருசி இருந்தாலும் ருசி தெரியாது. ருசி இல்லாத பொருள்களை மனிதன் அனுபவிக்க மாட்டான் இதுவே மனிதனின் சிந்தனை. பொருள்களில் ருசி இருந்து அனுபவிக்கும் மனிதனிடம் அந்த உணர்வு இல்லையென்றால் அவனுக்கு வியாதி என்று பொருள். இக்கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு நடந்த சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் நடந்து முடிந்த அரசியலை எண்ணிப் பார்.

அரசியல் பொருளாதாரம் போன்ற கருத்துக்கள் எல்லாம் சிந்தனை செய்வதற்கு உரிய கருத்துக்களே உணச்சி வசப்படக் கூடிய கருத்துக்கள் அல்ல.

அதனால் அவைகளுக்கு கொள்கைகள் என்று பெயர். இப்பொழுது நான் சொல்லுவதை வைத்துக் கொண்டு சிந்தி.

அரசியலிலே 'கொள்கை அரசியல்' என்றும் உணர்ச்சி அரசியல் என்றும் இரண்டு வகை உண்டு. அரசியல் துறை சிந்தனை செய்ய வேண்டிய துறையே. அதனால் நாட்டில் அனைவரும் கொள்கை அரசியலையே நடத்த வேண்டும். அரசியலை



சாப்பிட முடியுமா? முடியாது என்பதால் அந்த இடத்தில் உணர்ச்சி அரசியலை நடத்தக் கூடாது. கொள்கை அரசியலையே நடத்த வேண்டும்.

கடந்த காலத்தில் ஒரு சிலர் என்ன பாவத்தை செய்தார்கள்? யோசித்துப் பார். பாபர் மசூதி பிரச்சினை என்றும் ராமஜென்மபூமி பிரச்சினை என்றும் முன்னேற்ற வாழ்க்கைக்காக கமிஷன் அறிக்கை பிரச்சினை என்றும் பல பிரச்சினைகளை உணர்ச்சி அரசியலாக நடத்தினார்கள். ஆங்கிலத்தில் அதற்கு 'இஷ்யூ பேஸ்டு பாலிடிக்ஸ்' என்று முலாம் பூசினார்கள்.

இறைவன் தந்த முடிவு என்ன? நாட்டில் குழப்பமே மிஞ்சியது.

நல்ல மனிதர்கள் பிரச்சினைகளை தீர்க்கும் முறையையே யோசிப்பார்கள். பிரச்சினையைத் தீர்க்கவிடாமல் உணர்ச்சி அரசியலையே தொடர்ந்து நடத்தினால் அந்த மனிதன் நல்லவன் அல்ல என்பதை வீரர்கள் உணர வேண்டும். இது சிந்தனைக்கு உரிய ஒரு சிந்தனை என்று அறி.

மனிதன் தனது மூளையைக் கொண்டு சிந்திக்கின்ற சிந்தனைக்கு எல்லாம் கொள்கையே உடம்பு. உணர்ச்சி அதற்கு அங்கமல்ல. இந்தியாவில் துரதிர்ஷ்டவசமாக பல மொழி, மதம், இனம் இன்ன பிற கொள்கைகளுக்கெல்லாம் கொள்கையை வகுத்து அரசியலைக் காண்பதில்லை. உணர்ச்சியை வகுத்து கொள்கையைப் பார்க்க முடியாமல் தவிக்கிறார்கள். வீரனே இதுதான் கெள்கையின் தத்துவம். இன்றைய தினம் மக்கள் நாட்டு நடப்பிற்கு கொள்கை வேண்டுமா? உணர்ச்சி வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். யோசித்தால் அனைவரும் வலிமை பெறுவார்கள்.

(பூஜ்ய ஸ்ரீ ஞானச்சேரி மஹான் அருளிய "நேருக்கு நேர்" என்ற நூலிலிருந்து)

## வறட்டு வேதாந்தம்

இறைவன் என்பவன் தனியாக இருக்கிறான் என்ற நம்பிக்கை எனக்கு வரவில்லை என்றால், ஹிந்து மதத்திலுள்ள தத்துவங்களுக்கும், சாஸ்திர சம்பிரதாயங்களுக்குமாகவா நீ வாழ் கிறாய்? அது மிகவும் வறட்சியாக அல்லவா இருக்கும் என்கிறார் ஜெயதேவர். பாண்டுரங்கனுக்கு பண்டிதர்கள் தேவையில்லை. பக்தர்கள்தான் தேவை. பண்டிதனின் அகங்காரம் தேவையில்லை. பாமரனின் பக்திதான் தேவை. சாந்த சக்குபாய் பற்றி பிரும்மேந்திரர்: பக்தர்களால் சமுதாயத்திற்கு கஷ்டமில்லை. பக்திக்காக போராட்டம் நடத்துபவர்களால்தான் கஷ்டம். அடிப்படை வாதம் இறைவனுக்கு ஏற்பில்லை.

(ஞானிகள் அருளிய "ஞானக்களஞ்சியம்" பாகம்–2 என்ற நூலிலிருந்து)

## அருள்மிகு வந்ததெப்படி?

கோவிலுக்கு அருள்மிகு என்று எப்படி வந்தது? சுற்றி பணக் காரர்களும் பதவியில் உள்ளவர்களும் குடியிருப்பதாலா? இல்லை. கபாலிக்கு ஞானசம்பந்தர் வந்ததால், திருவான்மியூருக்கு வால்மீகி வந்ததால் இப்படி இப்படி.. நல்லெண்ணம் கொண்டவர்கள் குரல் கொடுத்தால் பாண்டுரங்கன் ஓடி வருவான். நாம் குரல் கொடுத்தால் சொந்தக்காரர்கள்தான் வருவார்கள். "ஜால்ரா போடுங்கள்".. ஆனால் மனிதர்களுக்கு போடாதீர்கள். சர்வ ஜாதிகளையும் சமமாக எண்ணுபவன் பாண்டுரங்கன். சர்வ ஜாதிகளையும் படைத்த வன் மிருகமான மனிதன். மனிதன் ஜாதியை விட மறுப்பதால் இறைவன் அதைக் கூற கட்டாயப்படுத்தப்படுகிறான்.

(ஞானிகள் அருளிய "ஞானக்களஞ்சியம்" பாகம்–2 என்ற நூலிலிருந்து)

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# திருச்செந்தூர் முருகனும் கட்டபொம்மனும்

முருகப்பெருமான் மீது வீரபாண்டிய கட்டபொம்மன் அளவு கடந்து வைத்திருந்த பக்திக்கு ஈடு இணையே கிடையாது.

தன் பக்தனின் மெச்சுதலை அங்கீகரிக்கும் விதமாக கட்டபொம்மன் மூலமாக முருகன் சில அற்புதங்களை நிகழச் செய்திருக்கிறான்.

கட்டபொம்மன், தினமும் திருச்செந்தூரில் முருகப்பெருமானுக்கு பூஜை, நிவேதனம் நடந்து முடிந்த பிறகே, தன் மதிய உணவை உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கட்டபொம்மனின் கோட்டை இருப்பதோ பாஞ்சாலங் குறிச்சியில். இங்கிருந்து அவ்வளவு தொலைவில் இருக்கிறது திருச்செந்தூர் முருக னாலயம். கோயிலில் முருகனுக்கு நிவே தனம் நடந்துவிட்டதை அவர் தெரிந்து கொள் ளும் விதமாக...

திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி வரை ஆங்காங்கே கல் மண்டபங்களை அமைத் தார். மண்டபத்தின் உள்ளே வெங்கல மணிகளை பொருத்தினார். ஒவ்வொரு மண்டபத் திலும் சேவகர்களை நிறுத்தியிருந்தார்.

திருச்செந்தூரில் உச்சிகால பூஜை நடந்து முடிந்தவுடனே திருச்செந்தூர் கோயில் ஆலய கோபுர மணி ஒலிக்கத் தொடங்குவது வழக்கம்.

இதைத்தொடர்ந்து அடுத்திருக்கும் மண்ட பத்திற்கு இந்த மணியோசை கேட்கும்.

இதற்காக ஆறுமுகநேரி, ஆத்தூர், ஒட்டபிடாரம்,பாஞ் சாலங்குறிச்சி உள்பட பல இடங்களில் மணி மண்டபம் அமைந் திருந்தார் கட்டபொம்மன்.

அந்த மண்டபத்திலிருக்கும் சேவகன், உடனே மண்டபத்தின் மணிகட்டை அவிழ்த்து மணியோசையை எழுப்புவான்.

இப்படி அடுத்தடுத்து ஒவ்வொரு மண்டபமாக மணி ஒலித்து, இறுதியில் பாஞ்சாலங்குறிச்சி மண்டபத்தில் மணி ஒலிக்கும்.

(இவற்றில் சில மண்டபங்களை இதன் வழியில் தற்போதும் காணலாம்.)

மேலும், திங்கட்கிழமை தோறும் அதி காலையில் கட்டபொம்மனுக்கு திருச்செந்தூர் முருகன் கோயிலிலிருந்து இலை விபூதி பிரசாதத்தை குதிரை வீரர்கள் கொண்டு வந்து கட்டபொம்மனிடம் கொடுத்துச் செல்வார்கள்.

விபூதி கையில் கிடைத்தபிறகே அன்றாட பணிகளை கட்டபொம்மன் துவங்குவார்.

திருச்செந்தூர் முருகன் கோயில் கோபுரத் தின் ஏழாவது நிலையில் ஒரு மணி தொங்க விடப்பட்டிருக்கும். இதனை கட்டபொம்மனே அமைத்துக் கொடுத்திருந்தார். இது பல வருடங் களாக ஒலிக்கச் செய்யாமலே இருந்து வந்தது.

இந்த கோபுரத்திலிருந்த மணியோசனையின் மூலமே, அடுத்திருக்கும் மணியை ஒலிக்கச் செய்து, முருகனுக்கு நிவேதனம் ஆகிவிட்டது என குறிப்புணர்த்துவர்.

இயங்காமலிருந்த இந்த மணியை, முன்பு கோயில் கும்பாபிஷேகம் நடந்தபோது மீண்டும் ஒலிக்கச் செய்யப்பட்டது. தற்போது உச்சிகால பூஜையில் இந்த மணி ஒலிக்கிறது.

மேலும் இவர் முருகன் மேல் கொண்டிருந்த பக்தியால், தன்னுடைய நெற் களஞ்சியங் களிலிருந்து திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு அன்னதானம் அளிக்க பல ஆயிரம் கோட்டை நெல்லை அனுப்பிக் கொண்டிருக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்கட்டபொம்மன்.



குடிமக்களும் தம் வயல்களிலிருந்து நெல் லைக் காவடியாகச் சுமந்து கோயிலுக்குச் செலுத்தும் நடைமுறையையும் கொண்டு வந்து பணித்திருந்தார்.

ஒரு சமயம், தன் மனைவிக்கு தங்க அட்டிகை ஒன்றை அன்பளிப்பாக வழங்க விரும்பிபொற் கொல்லரிடம் அதைத் தயாரிக்கும்படி சொல்லி யிருந்தார் கட்டபொம்மன். அன்றிரவு அவர் கனவில் தோன்றிய முருகன் அந்த அட்டிகையை நீ எனக்குத் தந்திருக்கலாமே? என்றாராம்.

அட்டிகை தயாரான உடனேயே அதை எடுத்துப் போய் திருச்செந்தூர் கோயிலில் முருகனுக்கு அணிவித்து விட்டார்.

இன்னொரு சமயம், திருச்செந்தூரில் மாசி திருவிழா நடந்து கோண்டிருந்தது.

தேரோட்டத்துக்குத் தேர் தயாராக நிற்கிறது. கட்டபொம்மன் வந்து வடம் பிடித்து கொடுக்க வேண்டும். ஏனோ அன்று, வர முடியவில்லை. சரி, நாமே தேரை இழுத்து விடலாம், என பக்தர்கள் தேரை இழுத்தனர். தேர் சிறிது தூரம் தான் உருண்டது. அதற்குமேல் நகராமல் நின்று விட்டது.

தேரின் சக்கரம் ஓரிடத்தில் பதிந்து நின்று கொண்டது. எவ்வளவோ பக்தர்கள் முயற் சித்தும் தேர் நகரவில்லை. இதற்கிடையில் கட்டபொம்மனுக்கு செய்தி கொண்டு சேர்த்து, அவரும் இங்கு வந்து சேர்ந்தார்.

கட்டபொம்மன் தேர்வடத்தை பற்றி பிடித் தார். உடனே தேர் நகர்ந்தது. இதுபோல பல அற்புதங்களை கட்டபொம்மனின் மூலம் முருகன், அவரின் பக்தியை மெச்சி அருளியிருக்கிறார்.

தாமிரபரணி ஆற்றங்கரையில், முத்தாலங் குறிச்சி என்று ஓர் அழகிய கிராமம் உண்டு. இங்கு கவிராயர் கந்தசாமிப் புலவர் எனும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவரும் மிக தீவிரமான முருகபக்தர். இவருக்கு இரு கண் களிலும் பார்வை கிடையாது.

இவர் பாடும் பாடலைக் கேட்க முருகப் பெருமானே நேரில் வந்து விடுவாராம்! அவ் வளவு ஆசை இவரின் பாடலின் மீது.

ஒருநாள் கவிராயர் கவி பாடிக் கொண்டி ருந்தார். வெற்றிலை போடும் பழக்கம் இருந்து வந்தது.

கவிராயருடைய வெற்றிலையை மெல்லும் போது, அதன் எச்சில் முருகனின் பரிவட்டம் மீது பட்டுவிட்டது.

அது திருச்செந்தூர் மூலஸ்தானத்தில்




ஆன்மிகமலர் மெயில் புக்

இருக்கும் மூலவர் பரிவட்டத்தில் தெரித்து தெரிந்தது.

இதைக் கண்ட பட்டர் பதை பதைத்து போனார். இப்படி ஏற்பட்டது எப்படி என்று தெரியாமல் மனம் நொந்தார்.

அன்றிரவு பட்டரின் கனவில் முருகன் தோன்றி, ‘பட்டரே, என்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவன் முத்தாலங்குறிச்சி கவிராயர் ஆவார்.

அவரும் பார்வையற்றவர். அவருக்குப் பார்வையளிக்க நான் முடிவு செய்து விட்டேன்.

ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளி தோறும் என்னை தரிசிக்க அவர் நடந்தே வருகிறார்.

அவரைக் கூப்பிட்டு வந்து எனக்கு அணிவிக்கப்பட்டிருக்கும் மாலையிலிருந்து ஒரு பூவை எடுத்து அவர் ஒரு கண்ணில் ஒத்து எடுப்பீராக!

அப்போது அந்தக் கண்ணில் அவருக்குப் பார்வை கிடைக்கும். மறு கண்ணை எப்போது முருகப்பெருமான் திறப்பார் என்று உங்களிடம் கேட்பார்.

அதற்கு அவரைப் பாஞ் சாலங்குறிச்சிக்குப் போகுமாறு சொல். அங்கே என் பக்தன் கட்டபொம்மன் அவருக்கு மறுகண்ணைத் திறப்பான் என்று கூறி மறைந்தருளிப் போனார்.

அடுத்த வெள்ளிக்கிழமை திருச்செந்தூர் வந்த கவிராயர் கடலில் நீராடி விட்டு வந்தார். அவரைக் கண்டுபிடித்து முருகன் சந்நிதிக்குக் கூட்டி வந்தார் பட்டர்.

முருகன் ஆணைப்படியே ஒரு பூவை எடுத்து கவிராயர் கண்ணில் வைத்து ஒற்றியெடுத்தார்.

பளிச்சென்று கண்ணில் பார்வை கிடைத்தது கவிராயருக்கு. இன்னொரு கண்ணின் பார்வை கிடைக்க நீங்கள் பாஞ்சாலங் குறிச்சி செல்லுங்கள் இது முருகனின் ஆணை, என பட்டர் கூறியனுப்பினார்.

இதன்படி பாஞ் சாலங்குறிச்சிக்கு சென்றார் கவிராயர். கவிராயரிடமிருந்து விவரம் தெரிந்துகொண்ட கட்டபொம்மன் வியப்பில் ஆழ்ந்தார்.

மறுகண்ணைத் திறக்க என்னிடம் முருகன் அனுப்பினாரா? என்று கேட்டு வியந்து நெகிழ்ந்து போனார்.

உடனே ஜக்கம்மாள் கோயிலில் பூஜைக்கு ஏற்பாடு செய்தார். பின் கவிராயரை ஒரு கையில் பிடித்து கொண்டு மறுகையில் உருவிய வாளுடன் கோயிலுக்கு நுழைந்தார்.

உருவி வாளுடன் கட்டபொம்மனின் நிலை கண்டு அதிர்ந்து போனார் கவிராயர்.

என்ன இது? உருவிய வாளுடன் கோயிலுக்குள் வருகிறீரகள்? என்று சினந்து கேட்டும் விட்டார். புலவருக்குத் தான் கோபத்திற்கு குறைவிருக்காதே!, அதேபோல கேட்டும் விட்டார்.

கோயிலின் புனிதத்தை அவர் சிதைக்கிறாரே என்ற ஆதங்கம் புலவருக்கு. ஆனால், கட்டபொம்மன் ஏதும் பேசாமல் ஜக்கம்மா தேவிக்கு அணிவிக்கப்பட்டிருந்த மாலையிலிருந்து ஒரு பூவை எடுத்து கவிராயரின் மறு கண்ணில் வைத்து ஒற்றினார்.

என்ன ஆச்சரியம்!



மறுகண்ணில் அந்தக் கண்ணும் பார்வை பெற்றது!

கவிராயர் ஆனந்தப்பட்டாலும், கட்டபொம்மனின் ஒழுங்கீனத்தால் மீண்டும் கோபப்பட்டார். ‘நீ ஆணவம் பிடித்தவன். அதனால்தான் தேவியின் சன்னிதானத்திலும் அதிகார மமதையில் உருவிய வாளுடன் நிற்கிறாய் என்றார்.

அம்மனை அவமதிக்கும் உன்னால் எனக்குக் கிடைத்த இந்தப் பார்வை எனக்கு வேண்டவே வேண்டாம், என்று கூறியவர் கட்டபொம்மனின் வாளை பிடுங்கி தன் கண்ணில் குத்திக் கொள்ள முயன்றார்.

புலவருடைய கரம் பற்றித் தடுத்தார் கட்டபொம்மன். கவிராயரே நான் ஆணவத்துடன் வாளைப் பிடித்து வரவில்லை, முருகப்பெருமானின் உத்தரவுப்படி என்னால் உமக்குப் பார்வை வராது போனால், இந்த வாளால் என்னையே குத்திக் கொண்டு உயிர் துறக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் உருவிய வாளுடன் இருந்தேன், என்று நிதானமாகச் சொன்னார்.

கவிராயர் அப்படியே ஸ்தம்பித்துப் போனார். ‘‘என்னது? உன் உயிரையே மாய்த்துக் கொள்ள நினைத்தாயா! நீ அல்லவா முருகனின் சிறந்த பக்தன்! என்னை மன்னித்து விடு கட்டபொம்மா! என்னை மன்னித்து விடு என்று கண்களில் நீர் ததும்ப கரங்கூப்பி சொன்னார்.

அப்போது முருகப்பெருமானின் அசரீரி கேட்டது. கவிராயரே உமக்குப் பார்வை தரவேண்டும் என்றால் முத்தாலங்குறிச்சியிலேயே பார்வை கொடுத்த பட்டரும், கட்டபொம்மனும் என் கடமைகளைச் செய்ய பிறந்தவர்கள் என உமக்கு உணர்த்தவே இந்தத் திருவிளையாடலை யாம் நிகழ்த்தினோம்.

இந்த சம்பவத்துக்குப் பிறகு கவிராயரும், கட்டபொம்மனும் நெருங்கிய நண்பர்களானார்கள்.

கவிராயரைப் பார்க்க கட்டபொம்மன் முத்தாலங்குறிச்சிக்கு வந்த போது அவர் தாமிரபரணி ஆற்றின் கரையில் குதிரையைக் நிப்பாட்டிய இடம், தற்போதும் *வீரபாண்டியன் கசம்* என்று அழைக்கப்பட்டு வருகிறது.

அங்கிருக்கும் கோயிலில் அதுவரை முகில் வண்ணநாதராகத் திகழ்ந்த ஈசன், அதன்பின் வீரபாண்டீஸ்வர் என அழைக்கப்பட்டும் வந்தார்.

தற்போது வீரபாண்டிய கசம் சிறு குட்டையாக மாறியிருக்கிறது!

கட்டபொம்மன் உருவாக்கிய திருவிழா வழிபாடுகள் திருச்செந்தூர் ஆலயத்தில் அவரது வாரிசுகளால் இன்றளவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இறைவன் நம் மூலமாக ஒரு திருவுகளை நிகழ்த்த அருளுவதெல்லாம் சாதாரணம் கிடையாது.

அவனை வணங்கி விட்டோம் என்றிருப்போர்க்கெல்லாம், சாதாரண வாழ்நிலையே கழியும். அதைவிட ஒரு படி மேலே வந்து, அவன் மீது பரிபூரண நம்பிக்கை வைத்துப் பாருங்கள். அவன், நம் மீது நம்பிக்கை கொணரும் பாத்திரங்களை நிகழக் காரணமாவான்.

அவன் மீது உயிரைவிட மேலான நம்பிக்கையை எவ்வளவு வைத்திருந்தால், கட்டபொம்மன் மீது முருகனுக்கு நம்பிக்கை பிறந்திருக்கும். நம் மீது அவனுக்கு நம்பிக்கை ஏற்படும் அளவிற்கு காராணகாரியங்களை செய்யத் துணிவோமாக!

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

# உடல் கவர்ச்சி இறை கவர்ச்சியாக மாற்றப்படுகிற போது, காமம் என்ற உணர்ச்சி, பக்தி என்ற உணர்வாக மாறிவிடுகிறது

மூலாதாரம் என்பது, நான்கு இதழ்கள் கொண்ட தாமரை மலர் போல பார்ப்பதற்கு இருக்கும். இந்த தாமரை வெள்ளை நிறமானது. இதில் குண்டலினி சக்தி என்பது மூன்றரை அங்குல அளவில் வட்டமாக ஒரு பாம்பு எப்படி சுருட்டிக் கொண்டு படுத்திருக்குமோ அதுபோலவே படுத்திருக்கும். இந்த பாம்பின் தலை சுழுமுனை நாடியின் துவாரத்தை அடைத்துக் கொண்டு இருக்கிறது. மூலாதாரத்தை நிலம் மற்றும் மண்ணோடு சம்பந்தப்படுத்தி யோக நூல்கள் கூறுகின்றன.

மூலாதாரத்தில் ஆட்சி செய்கின்ற சக்தியின் பெயர் ஷாகினி. நிலம் என்ற தத்துவத்தின் அதற்கு காரணமான நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பூத சக்திகளும் அடங்கி இருக்கிறது. ஐந்து பூதங்களின் சக்தியாக விளங்குவதனால், மூலாதார சக்கரத்தின் அதிதேவதையான ஷாகினி ஐந்து முகங்கள் கொண்டவளாக இருக்கிறாள். இவளுக்கு மூன்று கண்களும், நான்கு கைகளும் உண்டு. கைகளில் அங்குசம், தாமரை புத்தகம் ஆகியவற்றை தாங்குவதோடு,



சின்முத்திரையும் காட்டப்படுகிறது. வ,ச,ஷ,ஸ ஆகிய அச்சரங்கள் தேவியின் இருப்பிடமாகும். நான்கு அச்சரங்கள் என்பது வரதா, ஸ்ரீ, ஷன்டா,சரஸ்வதி என்ற சக்திகளை குறிக்கும். இவர்கள் சக்கர அதி தேவதையான, சாகினி தேவியின் பரிவாரங்கள் என்று சொல்லப்படுகிறது. சாகினி தேவி தனது ஆகர்ஷனத்தை எலும்புகளில் வைத்துள்ளாள்.

குண்டலினி சக்தி, மூலாதாரத்திலிருந்து கீழ்நோக்கி செயல்படுகிற போது, இனச்சேர்க்கை சம்மந்தமான சிந்தனைகளை அதிகப்படுத்துகிறது. இந்த இடத்தில் ஷியா சக்தியான, பார்வதி பரமசிவன், காமேஸ்வரன் காமேஸ்வரியாக இது சிருஷ்டி கட்டத்தின் முதல் நிலையாகும்.

இதனை காமகலை என்று வாத்ஸ்யாயனார், அதீ வீரராமபாண்டியன் போன்ற காம நூல் வல்லுனர்கள் அழைக்கிறார்கள். லோக குருவான ஆதிசங்கரர் காமகலையை விளக்கம் சொல்ல வரும்போது, காமம் என்பது சூரிய சக்தியாகவும், கலை என்பது சந்திரனாகவும் குறிப்பிடுகிறார். அதாவது சூரிய கலையான பிங்கலையும், சந்திர கலையான இடகலையும், மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடும் போது, அஜபா என்ற மந்திர ஒலியாக வருவதை சங்கரர் குறிப்பிடுகிறார்.

அஜபா என்ற மந்திரத்தை பற்றி விநாயகர் அகவலில்



தமிழ்பெரும் சித்தர் ஔவையார் குறிப்பிடுவதை நாம் அறிவோம். இயற்கையாக, சுவாச கோசத்திற்குள் காற்று நடந்து சென்று, வெளியில் வருகின்ற ஒலியே அஜபாமந்திரம் ஆகும். காற்று உள்ளே சென்று வெளியே வருவது ஒரு சுவாசம் எனப்படுகிறது. ஒருநாளையில் சராசரியாக, மனிதன் இருபத்தோராயிரத்து அறநூறு முறை சுவாசம் விடுகிறான். ஒவ்வொரு சுவாசமும், அஜபா மந்திரமாக உணர்ந்து நடத்தும் போது, மிக சுலபமாக குண்டலினி பாம்பு கண்விழிப்பு கொள்ளும் என்று ஔவை நம்புகிறாள்.

அஜபாமந்திரம் மூச்சுக் காற்றில் இருந்து கொண்டே இருந்தால், குண்டலினி சக்தியானது கீழ்நோக்கியே வராது. வருவதை பற்றி யோசிக்காது. மாறாக மந்திர உணர்வு இல்லாது போனால், சிற்றின்ப வேட்கையே அதிகமாக தோன்றும். மங்கையரின் கன்னமும், மதுக்கோப்பை கிண்ணமும் கவர்ந்து இழுக்கும். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று ஆரவாரத்தோடு ஆடவைக்கும். உண்பது, உறங்குவது, பிள்ளைகளை பெறுவது இவைகள் மட்டுமே வாழ்க்கை என்று தோன்றும். உடம்பு முழுவதும் வியாதிகள் பீடித்து இறப்பதற்கு முன்பே, நரக வாழ்க்கையை காட்டும். இப்படி மூலாதாரத்தில் தோன்றுகின்ற காம சிந்தனை அனாஹத சக்கரம் வரையில் மனிதனை தொடர்ந்து கொண்டே வரும், அனாஹத்தில் தான் குண்டலினி என்ற சிவபெருமான், காமம் என்ற மன்மதனை எரித்து சாம்பலாக்குகிறார்.

மூலாதாரத்தில் இருந்து காம அரக்கனை சம்ஹாரம் செய்து புறப்படுகிற குண்டலினி, சுவாதிஷ்டானம் என்ற இரண்டாவது நிலைக்கு வந்து சேர்கிறது. இவ்விடம் நீர் என்ற தத்துவத்தின் இருப்பிடம். இதன் வடிவம் ஆறு இதழ்கள் கொண்ட தாமரைப்பூவாகும். இந்த தாமரை பொன்னிறத்தில் ஜொலித்து கொண்டிருக்கிறது. இதை ஆட்சி செய்யும் சக்தியை காகினி என்று அழைக்கிறார்கள். நீர்




தத்துவத்தின் மூலகாரணங்களாக, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்கள் ஐந்தும் அமைகிறது. தண்ணீர் தவிர, மற்ற நான்கு பூதங்களை விளக்குவதற்கு காகினி என்ற சுவாதிஷ்டான சக்தி, நான்கு முகமுடையதாக, சூலம், பாசம், கபாலம், அபயமுத்திரை ஆகியவைகள் தாங்கிய நான்கு கைகள் கொண்டதாகவும் இருக்கிறது.

காகினி என்ற சக்தி கொழுப்பு தாதுவின் அடிப்படையில் இயங்குகிறது. மாமிசம் என்ற தாதுவில் மேதஸ் என்ற புதிய தாது உற்பத்தியாகிறது. இது மஞ்சள் நிறமுடைய கொழுப்பு தாதுவை உண்டாக்குகிறது. மேலும் சுவாதிஷ்டானம் ஆறு இதழ்களை கொண்ட தாமரை மலராக இருப்பதனால், ஒவ்வொரு இதழும் பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, லம்போஸ்டி, ரகதா என்ற ஐந்து பரிவார சக்திகளின் பெயர்களை தாங்கி, ஆறாவது சக்தியாக காகினி இருக்கிறது.

இந்த சக்கரத்தில், குண்டலினி சக்தி செயல்படுகிற போது, இனச்சேர்க்கை உணர்வு அதிகமாக தூண்டப்படும். சிற்றின்ப வேட்கையும், சிற்றின்ப ஆற்றலும், கட்டுகடங்காத காட்டெருமை கூட்டத்தைப் போல, சண்டித்தனம் செய்யும். மனம் சதா, சர்வகாலமும் ஆண்பெண் சேர்க்கையை பற்றியே எண்ணி கொண்டிருக்கும். ஆன்மீக வழியில் செல்கிறேன் என்று நெறிபிரண்டு போகின்ற பல சந்நியாசிகள், குண்டலினி சக்தி இந்த சக்கரத்தில் இருக்கும் போதே தவறுகளை செய்து தங்களது தவ வாழ்க்கையை முடித்து கொள்கிறார்கள். சுவாதிஷ்டானம் என்ற இந்த இரண்டாவது நிலையிலேயே குண்டலினி சக்தி அதிகநாள் நீடித்தால் விந்து விட்டவன் நொந்து சாவான் என்பது போல உடல் சிதைந்து மரணம் தேடி வரும்.

குண்டலினி சக்தியை, இந்த அபாய கட்டத்திலிருந்து மீட்டு மேல்நோக்கி தள்ளிவிடக் கூடிய சக்திகளாக, தியானமும், பகவான் நாம சங்கீர்த்தனமும் பெரிய துணை செய்கிறது. உடல் கவர்ச்சி இறை கவர்ச்சியாக மாற்றப்படுகிற போது, காமம் என்ற கீழான உணர்ச்சி, பக்தி என்ற புனித உணர்வாக மாறிவிடுகிறது. பக்தி இல்லையேல், இரண்டாவது படியோடு குண்டலினி பயிற்சியும், ஆன்மீகப் பயணமும் முற்றுப் பெற்றுவிடும். அதனால் தான் நமது முன்னோர்கள் ஊரு தோறும், ஆலயங்களை எழுப்பினார்கள். ஆற்றங்கரை அரசமரத்தடி, ஊர் சந்து முனை என்று எந்த இடத்தை பார்த்தாலும் தெய்வ மூர்த்திகளை சாசனம் செய்து வைத்தார்கள்.

மூன்றாவது நிலைக்கு, மணிபூரகம் என்று பெயர். மணிபூரகம் பத்து இதழ்கள் கொண்ட, செம்மை நிறமான தாமரை பூ. இது அக்னி தத்துவம். அக்னி, வாயு, ஆகாயம் ஆகிய மூன்று பூதங்கள் இந்த சக்கரத்திற்கு ஆதாரமாக இருப்பதனால், மூன்று முகங்கள் கொண்ட லாகினி என்ற சக்தி இதை இயக்குகிறது. வஜ்ராயுதம், வேல், குண்டாந்தடி அபய ஹஸ்தம் ஆகியவைகளை கொண்ட நான்கு கைகளும் இந்த சக்திக்கு உண்டு. மணிபூரகம், பத்து இதழ்கள் கொண்ட தாமரை பூ என்பதனால் டமாரி, டங்காரிணி, ஞாரினா, தாமஷி, ஸ்தான்வீ, தாட்சாயிணி, காஹிணி, நாரி, பார்வதி, பட்காரிணி என்ற பத்து பரிவார சக்திகள் லாகினி தேவியின் துணையாக அமைந்துள்ளது.

குண்டலினி சக்தி மணிபூரகத்தை தோடும் போது காமம் வேரோடு பிடுங்கப்பட்டு விடுகிறது. ஆத்ம சிந்தனையும் ஒருவித மகிழ்ச்சியும் அமைதி யும், குடிகொண்டிருக்கும். ஆனால், இந்த நேரத்தில் தொடர்ந்த பயிற்சியை சாதகன் செய்யாவிட்டால், புத்தி தடுமாறி, மீண்டும் சிற்றின்ப சேற்றிற்குள் விழுந்துவிட நேரிடும். கிடைத்த ஆன்மீக அமைதி போதும் என்ற திருப்தி இல்லாமல் இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற ஆசை நெருப்பை இந்த இடத்தில் தான், மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டும். இங்கு வளர்க்கப்படும் ஆசை, உலக ஆசை அல்ல. உலக நாயகனை நேருக்கு நேராக காண்பதற்கான ஆசை.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434









# நட்சத்திர பலன்கள்

மனித பிறப்புகள் அனைத்தும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டு, இன்னாருக்கு இன்ன காரண காரியங்கள் நடைபெறவேண்டும் என்று விதி என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதை இன்னும் எளிதாக கூறவேண்டு மெனில், மனித பிறப்பின்போது அவருக்கென்று ஒரு நட்சத்திரம், திதி, நாள், கிழமை, வருடம் போன்றவை நிர்ணயிக்கப்பட்டு, இவற்றையெல்லாம் கொண்டு, அந்த மனிதனின் வாழ்நாளில் நடைபெறும், நடைபெறப்போகும் அனைத்தையும் அறிந்து கொள்ளும் விதமாக ஜாதகம் என்ற பெயரில் கணிக்கப்படுகிறது.

அக்காலத்தில் ஜாதகம்தான் ஒரு மனிதனின் ஆதார்கார்டாக விளங்கியது. எந்த நல்ல காரியங்கள் நடைபெற்றாலும் இந்த ஜாதகம் மூலமாகவே கணித்துவரப்பட்டது.

இதுபோன்ற ஜாதக கணிப்பில் ஒருசில குறைகள் இருந்தாலும், அதை நிவர்த்தி செய்யவும் ஜோதிடத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது. அந்த வகையில், ஒவ்வொருவரின் நட்சத்திரங்களுக்கு ஏற்ப அந்த அந்த நட்சத்திரத்திற்குரிய தெய்வங்களும் முக்கியத்துவம் வாய்ந்த சக்தியாகவும், பரிகார சக்தியாகவும் விளங்கின, அந்தவகையில் ஒவ்வொருவரின் நட்சத்திரத்திற்குரிய கோயில்களை பார்ப்போம்.

## அசுவினி:

**கோயில்: திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: அரக்க குலப்பெண் ஜல்லிகை சிவபக்தையாக இருந்தாள். அவள் கணவன் விருபாட்சன் ஒரு அந்தணச் சிறு வனைக் கொன்று உணவாக்கினான். இந்த பாவத்தால் விருபாட்சனின் உயிர் பிரிந்தது. ஜல்லிகை பிறவிமருந்தீஸ்வரரை வணங்கி கணவன், சிறுவனை உயிர்ப் பித்தாள்.

சிறப்பு: நோய்களுக்கு நிவாரணம் தரும் அசுவினி நட்சத்திர தேவதையும், மருத்துவ தேவதைகளும் இங்கு வழிபடுவதாக ஐதீகம். அசுவினி நட்சத்திர நாளில் இங்கு தன்வந்திரி ஹோமம் செய்தால் ஆரோக்கியம் நிலைக்கும்.

போன்: 94438 85316, 04369 222 392

## பரணி:

**கோயில்: நல்லாடை அக்னீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: இத்தலத்தில் மிருகண்ட மகரிஷி ஒரு யாகம் நடத்தினார். யாகத்தீயில் போட்ட பட்டு, சிவனை சென்று சேர்வது குறித்து சிலருக்கு சந்தேகம் எழுந்தது. கருவறைக்குச் சென்று காணும்படி மகரிஷி கூற, சிவன் மீது பட்டாடையைக் கண்டனர். பரணி என்ற அக்னி இருப்பதாகவும், அதுவே யாகப்பொருட்களை சிவனிடம் சேர்ப்பதாகவும் மகரிஷி விளக்கினார். இதனால் இது பரணித்தலமானது.

சிறப்பு: பரணி நட்சத்திரத்தினர் ஹோமம் நடத்தலாம். கார்த்திகை மாத பரணி மிகவும் சிறப்பு. மேற்கு நோக்கி சுவாமி இருப்பதால் சக்தி அதிகம்.

போன்: 94866 31196, 04364 285 341

## கார்த்திகை:

**கோயில்: கஞ்சாநகரம் காத்ர சுந்தரேஸ்வரர்**

தல வரலாறு: தேவர்கள், பத்மாசுரனிடம் இருந்து காக்கும்படி சிவனை வேண்டினர். அப்போது, சிவன் இங்கு நெருப்பு வடிவில் யோகத்தில் ஆழ்ந்திருந்தார். தவம் கலைந்த அவரது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் பறந்தன. அதிலிருந்து கார்த்திகேயன் (முருகன்) அவதரித்தார். தீப்பொறி பொன்னிறமாக எழுந்ததால் “காஞ் சன நகரம்‘ எனப்பட்டது. அதுவே “கஞ் சாநகரம்‘(பொன்நகரம்) என்றாகிவிட்டது.

சிறப்பு: கார்த்திகையில் பிறந்தவர்கள் கார்த்திகை நட்சத்திரம் மற்றும் பிரதோஷ நாளில் தீபமேற்றி வழிபட வாழ்வு வளம் பெறும். கார்த்திகையில் பிறந்த கன்னிப்பெண்கள் அம்மனை வழிபட விரைவில் திருமணயோகம் கைகூடும்.

போன்: 94874 43351, 04364 282 853.

## ரோகிணி:

**கோயில்: காஞ்சிபுரம் பாண்டவதூதப் பெருமாள் கோயில்**

தல வரலாறு: வைசம்பாயனர் ரிஷியிடம், ஜன்மேஜய மகாராஜா, மகாபாரதக் கதை கேட்டார். கிருஷ்ணரின் விஸ்வரூப தரிசனம் பற்றிக் கேட்ட போது, மன்னருக்கும் அந்த தரிசனம் பெற வேண்டும் என்ற ஆவல் உண்டானது. ரிஷியின் வழிகாட்டுதல்படி காஞ்சிபுரத்தில் தவம் செய்து தரிசனம் பெற்றார். அவரே பாண்டவதூதப்பெருமாளாக கோயில் கொண்டிருக்கிறார்.

சிறப்பு: ரோகிணிதேவி, இத்தல பெரு மாளை வழிபட்டு சந்திரனை அடையும் பேறு பெற்றாள். ரோகிணி நட்சத்திரத்தினர் புதன், சனிக்கிழமை, அஷ்டமிதிதி, 8ம் தேதிகளில் வழிபடுவது சிறப்பு.

போன்: 044 2723 1899.

## மிருகசீரிஷம்:

**கோயில்: எண்கண் ஆதிநாராயணப் பெருமாள் கோயில்**

தல வரலாறு: பெருமாளை நோக்கி தவமிருந்த பிருகுமுனிவர், சிங்க வேட்டைக்கு வந்த சோழனின் ஆரவாரத்தால் தவம் கலைந்து எழுந்தார். கோபத்தில் அவனை சிங்கமுகத்தோடு பிறக்க சாபமிட்டார். விருத்தகாவிரி என்னும் வெற்றாற்றில் நீராடி, எண்கண் பெருமாளை வணங்கி மீண்டும் மனிதமுகத்தைப் பெற்றான்.

சிறப்பு: மிருகசீரிட நட்சத்திரத்தினர், மிருகசீரிட நாளில் இங்கு வந்து வழிபட்டால் வாழ்வில் பிரச்னை நீங்கி சந்தோஷம் கூடும்.

போன்: 94433 51528, 04366 269 965.

## திருவாதிரை:

**கோயில்: அதிராம்பட்டினம் அபயவரதீஸ்வரர்கோயில்**

தலவரலாறு: அசுரர்களுக்கு அஞ்சிய தேவர்கள், திருவாதிரை நட்சத்திர மண்டலத்தில் தஞ்சம் அடைந்து சிவனருள் பெற்றனர். அபயம் அளித்தவர் என்பதால், சிவனுக்கு "அபயவரதீஸ்வரர்' என பெயர் வந்தது. திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்த ரைவத மகரிஷி, பைரவ மகரிஷி ஆகியோர் அருவநிலையில் இக்கோயில் சிவனை வழிபடுவதாக ஐதீகம்.

சிறப்பு: திருவாதிரை நட்சத்திரத்தினர் இங்கு வழிபட்டால் தீர்க்காயுள், தைரியம் கிடைக்கும். அதிவீரராம பாண்டியர் திருப்பணி செய்ததால், இத்தலம் "அதிவீரராமன்பட்டினம்' என வழங்கியது. தற்போது அதிராம்பட்டினமாகி விட்டது.

போன்: 99440 82313, 94435 86451.

## புனர்பூசம்:

**கோயில்: வாணியம்பாடி அதிதீஸ்வரர் கோயில்**

தலவரலாறு:பிரம்மாவைப்பிரிந்தசரஸ்வதி பூலோகம் வந்தாள். அவளை சிருங்கேரியில் கண்டு சமாதானப்படுத்தினார். இருவரும் பல சிவத்தலங்களுக்குச் சென்று வழிபட்டனர். அதிதீஸ்வரர் கோயிலில் தங்கிய கலைவாணியைப் பாடும்படி சிவபார்வதி வேண்ட, அவளும் இனிமையாகப் பாடினாள். அதனால் இத்தலம் வாணியம்பாடி என்றானது.

சிறப்பு: கஷ்யப மகரிஷியின் மனைவி அதிதி, வாணியம்பாடியில் புனர்பூச நட்சத்திர நாளில் விரதமிருந்து தேவர்களுக்குத் தாயாகும் பாக்கியம் பெற்றாள். மேற்கு நோக்கிய இத்தலத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தினர் வழிபட்டால் சிறப்பான வாழ்வு அமையும்.

போன்: 99941 07395, 04174 226 652



## பூசம்:

**கோயில்: விளங்குளம் அட்சயபுரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: காலில் ஏற்பட்ட வாதநோயைப் போக்கும் விதத்தில் சனி, திருத்தல யாத்திரை புறப்பட்டார். விளங்குளத்தில் இருக்கும் அட்சயபுரீஸ்வரரை வழிபட்டபோது நோய் குணமானது. அன்று, பூசம் நட்சத்திரமாக இருந்தது. பித்ருக்களின் அம்சமான காகங்களின் குருவான "பித்ரசாய்' சித்தர் இங்கு தினமும் வழிபடுகிறார்.

சிறப்பு: இங்கு மந்தா, ஜேஷ்டா ஆகிய தேவியருடன் சனீஸ்வரர் மணக்கோலத்தில் வீற்றிருக் கிறார். பூச நட்சத்திரத்தினர் பூசம் மற்றும் திரிதியை நாளில் இவருக்கு அபிஷேகம் செய்து எட்டுமுறை சுற்றி வர நோய் நீங்கும். திருமணயோகம் கை கூடும்.

போன்: 97507 84944, 96266 85051.

## ஆயில்யம்:

**கோயில்: திருந்துதேவன்குடி கற்கடேஸ்வரர் கோயில்**

தல வரலாறு: துர்வாசரின் சாபத்தால் நண்டு பிறப்பெடுத்த கந்தர்வன், சிவனை வழிபட்டு சாப விமோசனம் பெற்றான். கற்கடகத்திற்கு (நண்டுக்கு) அருள்புரிந்தவர் என்பதால் சுவாமி "கற்கடேஸ்வரர்' என பெயர் பெற்றார். பிரகஸ்பதியின் வழிகாட்டுதலின்படி, இந்திரன் இங்குள்ள சிவனை1008 மலர்களால் வழிபட்டு ஆணவம் நீங்கப்பெற்றான். இந்திரன் திருந்திய தலம் என்பதால் "திருந்து தேவன்குடி' என்ற பெயர் வந்தது. "நண்டுக்கோயில்' என்றால் தான் தெரியும்.

சிறப்பு:ஆயில்யம், தேய்பிறை அஷ்டமிநாளில் கற்கடேஸ்வரருக்கு நல்லெண்ணெய் சாத்தி வழிபட நன்மை பெருகும்.

போன்: 99940 15871, 0435 200 0240

## மகம்:

**கோயில்: ஒடுக்கம் தவசிமேடை மகாலிங்கேஸ்வரர் கோயில்**

தல வரலாறு: மக நட்சத்திரத்தில் அவதரித்த பரத்வாஜர் தவமேடை அமைத்து மகாலிங்கேஸ்வரரை வழிபட்ட தலம் ஒடுக்கம் தவசிமேடை. கோயிலுக்கு வரும் அடியவர்களின் பாதம் தன்மீது படவேண்டும் என்பதற்காக பரத்வாஜரே இங்கு பீடமாக இருக்கிறார்.

சிறப்பு: மகம், பஞ்சமி, சஷ்டி, ஏகாதசி, துவாதசி, பிரதோஷம், மாதசிவராத்திரி நாளில் மகாலிங்கேஸ்வரருக்கு அபிஷேகம் செய்து வழிபட வாழ்வு வளம் பெறும். இங்கு மாணிக்கவல்லி, மரகதவல்லி அம்மன் சந்நிதிகள் உள்ளன.

சிவராத்திரியை ஒட்டி 30 நாட்கள் காலை நேரத்தில் மூலவர் மீது சூரியஒளி விழுவது சிறப்பு.

போன்: 95782 11659, 93624 05382.

## பூரம்:

**கோயில்: திருவரங்குளம் ஹரிதீர்த்தேஸ்வரர் கோயில்**

தல வரலாறு: புத்திரப் பேறு வாய்க்காத சோழ மன்னன் கல்மாஷ பாதன் அகத்தியரின் உதவியை நாடினான். அவரின் வழிகாட்டுதலால், திருவரங்குளம் சிவனை வணங்கப் புறப்பட்டான். அந்தக் கோயில் புதைந்து போனது அறிந்து பூமியைத் தோண்டினான். லிங்கத்தில் கடப்பாறை பட்டு ரத்தம் பீறிட்டது. தோஷம் நேரும் என வருந்தி உயிர் விடத் துணிந்தான். சிவன் அவனுக்கு காட்சி தந்து குறை தீர்த்தார். இந்த நிகழ்வு பூரம் நட்சத்திரத்தில் நடந்தது.

சிறப்பு: பூர நட்சத்திர லோகத்தில் சிவ,நாக, ஞானபிரம்ம, இந்திர, ஸ்ரீ, ஸ்கந்த, குரு தீர்த்தங்கள் உள்ளன. திருவரங்குளத்திலும் இவை ஏழும் உள்ளன. பூர நட்சத்திரத்தினர் தங்கள் பிறந்தநாளில் இங்கு வழிபட்டால் வாழ்வில் மேன்மை பெறுவர்.

போன்: 98651 56430, 99652 11768

## உத்திரம்:

**கோயில்: இடையாற்றுமங்கலம் மாங்கல்யேஸ்வரர் கோயில்**

தல வரலாறு: உத்திரம் நட்சத்திரத்தில் பிறந்தவர் மாங்கல்ய மகரிஷி. இவர் அகத்தியர், வசிஷ்டர் ஆகியவர்களின் திருமணத்தில் மாங்கல்ய தாரண பூஜை நடத்தியவர். யாரும் அறியாமல் சூட்சும வடிவில் பூலோகத்தில் சிவனை வணங்கி தன் சக்தியை அதிகரித்துக் கொண்டார். சிவன் இவருக்கு அருள்புரிந்த தலமே இடையாற்று மங்கலம்.

சிறப்பு: மணவாழ்வுக்காக காத்திருப்பவர்கள் இங்கு வழிபடுவது சிறப்பு. திருமணம் நிச்சயித்தபின், மாங்கல்ய மகரிஷிக்கு வெற்றிலைபாக்குடன் கல்யாண பத்திரிகை வைத்து வேண்டிக் கொள்கின்றனர். உத்திர நட்சத்திரத்தினர் வழிபட்டால் தீர்க்க சுமங்கலி பாக்கியம் பெறுவர்.

போன்: 98439 51363, 0431 254 4070.

– அடுத்த 12 நட்சத்திரங்கள் அடுத்த இதழில்

# மார்கழி சிறப்புக்கள்...

மாதங்களில் நான் மார்கழியாகஇருக்கிறேன் என பகவான் கிருஷ்ணர் இம்மாதத்தை சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

இந்த மாதம் ஆன்மீகத்தில் தேவர்களுக்கான அதிகாலை நேரமாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே இந்த மாதம் முழுவதும் இறைவழிபாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வருடத்தின் ஒன்பதாவது மாதம் மார்கழி ஆகும். இம்மாதம் தனுர் மாதம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்மாதம் முழுவதும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு வாசலில் வண்ணக்கோலம் இட்டு இறைவழிபாடு செய்வது வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது.

ஓசோன் படலமானது பூமிக்கு மிக அருகில் இம்மாதத்தில் உள்ளது. எனவே சுத்தமான காற்றை சுவாசித்து உடல்நலனைப் பேணும் பொருட்டு அதிகாலை வழிபாடு இம்மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் அதிகாலை இறைவழிபாடு பற்றி மாணிக்க வாசகர் திருவெம்பாவையிலும், ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையிலும் போற்றியுள்ளனர்.

மார்கழியில் அதிகாலை வழிபாட்டில் கோவில்களில் வேதங்களுக்குப் பதிலாக திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன.

இம்மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் என்றும் பதினாறு மார்க்கண்டேயர் பிறந்தார். எனவே மரணத்தை வெல்லும் மாதம் மார்கழி என்று மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது. ம்ருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் சிறந்தாகக் கருதப்படுகிறது.

இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனுமன் ஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம், உற்பத்தி ஏகாதசி போன்ற விழாக்கள், பண்டிகைகள், விரதமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

திருவாதிரை திருவிழா மார்கழியில் பௌர்ணமியை ஒட்டிய திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவானது சிவபெருமானின் வடிவமான ஆடலரசன் நடராஜருக்கு கொண்டாடப்படுகிறது.

திருவாதிரைக் கொண்டே சிவபெருமானுக்கு ஆதிரையன் என்ற பெயர் வழக்கத்தில் உள்ளது. இவ்விழாவானது 1500 ஆண்டுகள் பழமையானது.

இவ்விழா பற்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். திருவாதிரை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகத்தின் ஒரு சில பகுதிகள், இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் ஆகியோரால் மிகவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் திருச்சிற்றம்பலம் என்னும் தில்லை சிதம்பரத்திலும், உத்திரகோசமங்கையிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவின்போது திருவாதி ரைக்களியும், ஏழுகறிக்கூட்டும் இறைவனுக்கு படைக்கப்படுகின்றன. திருவாதிரைக்கு ஒருவாய் களி என்பது இவ்விழா பற்றிய பழமொழியாகும்.



அன்றைய தினம் விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரதம் சிவனுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. இவ்விரத வழிபாடு மேற்கொண்டால் நடனகலையில் சிறக்கலாம்.

வைகுண்ட ஏகாதசி மார்கழியில் வளர்பிறை ஏகாதசியில் கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசியில் திருமால் வழிபாடு மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது.

பெரும்பாலும் எல்லா இந்து மக்களாலும் இத்தினத்தில் விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. திருமாலை வழிபடும் விரதமுறைகளில் இது மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது.

காயத்ரிக்கு மிஞ்சிய மந்திரமும் இல்லை, ஏகாதசிக்கு மிஞ்சிய விரதமும் இல்லை என்பது இவ்விரதம் பற்றிய பழமொழியாகும். இவ்விழாவில் சொர்க்கவாசல் திறப்பு என்பது முக்கிய நிகழ்சியாகும்.

வைகுண்ட ஏகாதசி அன்று துளசி நீரினை மட்டும் உட்கொண்டு பகல் மற்றும் இரவு வழித்திருந்து திருமால் பற்றிய பாடல்கள் பாடி விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரத வழிபாடு வைகுந்த பதவி என்னும் மோட்சத்தை நல்கும் என்று கருதப்படுகிறது.

பாவை நோன்பு : ஆயர்பாடியில் கோபியர்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் ஆற்றிற்குச் சென்று நீராடி மண்ணால் செய்த காத்யாணி தேவியை வழிபட்டு தங்களுக்கு நல்ல கணவன் கிடைக்க வழிபாடு நடத்தினர். பெண்கள் கடைப்பிடித்த விரதமாயின் இவ்விரதம் பாவை நோன்பு என்று வழங்கலாயிற்று.

ஆண்டாள் பாவை நோன்பினை மேற்கொண்டே அரங்கனை கணவனாக அடைந்தாள். ஆண்டாள் பாவை நோன்பின்போது நெய், பால் முதலியவற்றை உண்ணாமலும், கண்ணுக்கு மையிடாமல், தலையில் மலர் சூடாமல் புறஅழகில் நாட்டம் செலுத்தாமல் இறைநாட்டத்தில் மட்டும் மனதினைச் செலுத்தி பாவைநோன்பினை மேற்கொண்டாள்.

எனவே கன்னிப்பெண்கள் நல்ல கணவன் கிடைக்க மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி கோவிலுக்குச் சென்று ஆண்டாள் எழுதிய திருப்பாவையைப் பாடி வழிபாடு நடத்து கின்றனர். திருமணமான பெண்கள் மகிழ்ச்சியான மணவாழ்வு நீடிக்க வேண்டியும், குடும்ப நலன் வேண்டியும் இவ்விரத்தினை மேற்கொள் கின்றனர். பாவை நோன்பு 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

இவ்விரத்தினை பெரும்பாலும் கன்னிப்பெண்கள் கடைப்பிடிப்பர். இவ்விரதத்தின்போது திருவெம்பாவை பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்வழிபாட்டில் பிட்டு படைக்கப்படுகிறது. இதனால் இவ்வழிபாடு பிட்டு வழிபாடு என்று அழைக்கப்படுகிறது.

– மு.கிருஷ்ண மோகன்
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
போன்: 8526223399

○ ஆன்மிகம் ○ தத்துவம் ○ உடல்நலம் ○ பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.